# திறவுகோல்

ஆவணி 2049
மாத இதழ்

## செண்பக வனம்

காவிரித்தாய்

எட்டு வழி சாலையா? துட்டு தரும் சாலையா?

‘பாவ’பட்டதாரி

மூத்தகுடி - தொன்மை மறவேல்

நான் யார்?

வெளியீடு
மன்னையின் மைந்தர்கள் அமைப்பு

மண்ணின் மாற்றத்தை நோக்கி

மாற்றங்களை பிறரிடம் எதிர்பார்க்காமல் எம்மிடம் இருந்து ஆரம்பிக்க வேண்டும் என எண்ணிய பல எளிய மக்கள் ஒன்று சேர்ந்து டிசம்பர் 26, 2014ம் தேதி முகநூலில் மன்னையின் மைந்தர்கள் குழு ஆரம்பித்து இன்று 4966 முகநூல் நட்புகளுடன் தொடர்ந்து பயணிக்கிறது.

இணையத்தில் மட்டும் இல்லாது களத்திலும் பல செயல்களை வெற்றிகரமாக செய்து வருவது குறிப்பிடத்தக்கது.

குறிப்பாக நம்மாழ்வார் ஏரியை தூர்வாரி மீட்டெடுத்தனர், நம்மாழ்வார் பூங்கா, மீத்தேன் திட்ட எதிர்ப்பு போராட்டங்கள், உயர்திரு. சகாயம் (இ.ஆ.ப.) அவர்களை கொண்டு நமது வாக்கு! நமது உரிமை!! தேர்தல் கருத்தரங்கம், கருவேல மரம் அழிப்பு (மன்னார்குடி தொடர்வண்டி நிலையம் அருகில்), நெகிழி அழிப்பிற்கான விழிப்புணர்வு, இரத்த தான முகாம், கடலூர் வெள்ள நிவாரண உதவி, பூமியை காப்போம் கருத்தரங்கம் என பல உறுப்பினர்களின் ஒத்துழைப்புடன் சிறப்பாக நடைபெற்றது. தற்பொழுது அரிச்சபுரம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியின் அடிப்படை வசதிகளை சரி செய்து கொண்டு வருகிறார்கள்.

நோக்கம்

மக்களின் வாழ்வியலை மேம்படுத்துவதையும், இயற்கையை பேணி காப்பதையும் முதன்மையாக கொண்டு அதற்கு தேவையான விழிப்புணர்வை நாங்களும் பெற்று அதனை மக்களுக்கும் கொண்டு செல்வதே இவ்வியக்கத்தின் நோக்கம்.

# கொசுவின் தத்துவமும்
## மரங்கள் உணர்த்தும் பாடமும்



செந்தில் பக்கிரிசாமி
மன்னை

நம் அன்றாட வாழ்வில் நாம் சில துன்பங்களை சில பூச்சிகள் மூலம் அனுபவிக்கிறோம். அதில் குறிப்பாக இரண்டு சொல்லலாம். கொசு மற்றும் மூட்டை பூச்சி.

இதில் மூட்டைபூச்சி என்ன செய்யும் என்றால் நம்மிடம் இருந்து நல்லதை பெறும்.

பதிலுக்கு நமக்கு பெரிதாக ஒன்றும் கொடுக்காது. மிக சுயநலவாதி. அதாவது நம்மிடமிருந்து ரத்தத்தை உறிஞ்சும். பதிலுக்கு நமக்கு எதுவும் கொடுப்பதில்லை, தூக்கத்தை தான் கெடுக்கிறது.

ஆனால் மூட்டைப் பூச்சியை விட பெரும் சுயநலவாதி, பயங்கரவாதி யார் என்றால் அது கொசு தான்.

ஆங்கிலத்தில் ஒரு தத்துவம் உண்டு. "TAKE BEST AND GIVE WORST". அதாவது சிறந்த ஒன்றை நம்மிடம் இருந்து எடுத்துக் கொண்டு பதிலுக்கு மோசமான ஒன்றைக் கொடுப்பது. இது தான் கொசுவின் தத்துவம். கொசு என்ன செய்யும் என்றால் நம்மிடம் இருந்து விலைமதிக்க முடியாத ரத்தத்தை உறிந்துக் கொண்டு பதிலுக்கு நம்மிடம் நோய் பரப்பும் கிருமியை செலுத்துகிறது.

மிக மிக ஆபத்தான இந்த தத்துவம் தான் இன்று ஒவ்வொரு நாடுகளும் சந்தித்துக் கொண்டிருக்கின்றன. குறிப்பாக இந்தியா.
இந்த அரசாங்கம் நம்மிடமிருந்து விலைமதிக்க முடியாத இயற்கை வளங்களை எடுத்துக் கொள்கிறது. நம் வரிப்பணத்தை எடுத்துக் கொள்கிறது. நம் உழைப்பை எடுத்துக்கொள்கிறது.

நம் மகிழ்ச்சி, மன நிம்மதி என அனைத்து நல்ல விஷயங்களையும் எடுத்துக் கொள்கிறது. பதிலுக்கு என்ன கொடுக்கிறது? நமக்கு அழிவைத் தரும் மீத்தேன் போன்ற திட்டங்களும், அணுஉலை போன்ற திட்டங்களும், பசுமை வழிச்சாலை என்ற பெயரில் விவசாயத்தை அழிக்கும் திட்டமும், ஸ்டெர்லைட் போன்ற உயிருக்கு உலை வைக்கும் தொழிற்சாலைகளையும் கொடுக்கிறது.

இது எவ்வளவு பெரிய அநியாயம்? இந்த கொசுவின் தத்துவம்தான் இன்று நம்மைப் பிடித்திருக்கும் பெரும் கேடு.

மக்கள் மீது அக்கறை இல்லாத அதிகார மையங்கள் கொசுக்கள் ஆக மாறி நம்மிடம் இரத்தத்தை உறிஞ்சுகின்றன, பதிலுக்கு கிருமிகளை கொடுக்கின்றன.

இந்த நேரத்தில் தான் மரங்கள் உணர்த்தும் பாடத்தை நாம் அறிய வேண்டும். மரங்களின் பயன் என்ன? வளிமண்டலத்தில் உள்ள கரியமில வாயுவை எடுத்துக்கொண்டு ஆக்சிஜனை வெளியிடுகிறது. ஆக நமக்கு கெடுதல் விளைவிக்கும் அந்த கரியமில வாயுவை எடுத்துக் கொண்டு நமக்கு நன்மை பயக்கும் ஆக்சிஜனை கொடுக்கிறது. இது முற்றிலும் கொசுவின் தத்துவத்திற்கு எதிரானது. சிறந்தது, தேவையானது.

ஆனால் துரதிஷ்டவசமாக மரங்கள் போல் உள்ள அரசாங்கம் ஏதுமில்லை. எது நடந்தாலும் கண்டுகொள்ளாத மரம் போல் உள்ள அரசாங்கம் மட்டுமே இங்கேயுள்ளது.

எனவே மக்களாகிய நாம் தான் முடிவு செய்ய வேண்டும். நாம் தான் விழிப்புணர்வு பெற வேண்டும். நாம் எவ்வாறு இருக்க போகிறோம், மூட்டை பூச்சியாகவா, கொசுவாகவா இல்லை மரமாகவா?...

இந்த சமூகம் நமக்கு அளித்துள்ள அத்தனை நல்லவற்றையும் எடுத்துக் கொண்டு பதிலுக்கு நாம் எதுவுமே கொடுக்காமல் ஒரு மூட்டை பூச்சி போல் சுயநலமாக இருக்கப் போகிறோமா?

அல்லது இந்த சமூகம் கொடுக்கும் அத்தனை நல்ல விஷயங்களையும் எடுத்துக்கொண்டு அதாவது நீர், நிலம் மற்றும் காற்று இவையனைத்தையும் எடுத்துக் கொண்டு பதிலுக்கு நாம் சுவாசிக்கும் காற்றை மாசுபடுத்தும் ஆலைகள், நீரை மாசுபடுத்தும் தொழிற்சாலைக் கழிவுகள், நிலத்தை மாசுபடுத்தும் நெகிழிக் குப்பைகள் இவற்றை கொடுக்க போகிறோமா? அல்லது மரமாக மாறி சுற்றுப்புறத்திற்கு கேடுவிளைவிக்கும் அதாவது நிலம் நீர் காற்று இவை மூன்றையும் மாசுபடுத்தும் மீத்தேன், அணுவுலை, ஸ்டெர்லைட் மற்றும் சாயப்பட்டறை கழிவுகள் இவற்றை நீக்கிவிட்டு பதிலுக்கு ஏரிகள் குளங்கள் அணைகள் நீர்நிலைகள் இவற்றை பாதுகாத்தல் மற்றும் விவசாயத்தை மேம்படுத்துதல் போன்ற நல்ல விஷயங்களை இந்த சமூகத்திற்கு கொடுக்க போகிறோமா?

சிந்திப்போம். செயல்படுவோம்!

- மன்னை செந்தில் பக்கிரிசாமி

# சுதந்திரம்

போர் பல புரிந்தோம்,
உயிர் பல துறந்தோம்,
மண்ணின் உரிமையை மீட்க
மரணம் வரை சென்றோம்

மக்களையும் இழந்தோம்,
மாக்களையும் இழந்தோம்,
ஆயினும் வள்ளுவன் வாக்கினைக் கண்டு
முயற்சி இழவாமல் இருந்தோம்!

உயிரை துச்சமென எண்ணி நம்
முன்னோர்கள் ஏந்தினர் வீரம் மற்றும்
விவேகம் என்ற அஸ்திரம்,
இறுதியில் தான் நாம் அடைந்தோம் நம்
தேசத்தின் சுதந்திரம்!

எழுத்துரு எண்ணம்
பா.மாதவன்
இராஜமன்னார்குடி

# விதைக்குள் விதைத்திடு

நெருப்போடு போராடியது,
இரும்பு ஆயுதமானது..!
இருளோடு போராடியது,
கூட்டுப்புழு பட்டாம் பூச்சியானது..!
மண்ணோடுப் போராடியது,
விதை மரமாக மாறியது..!
நீயும் -
வாழ்க்கையோடுப் போராடு!
வரலாறு படைக்க முடியும்..!?




முனைவர். சா.சம்பத்
மன்னார்குடி



திருநிறைச்செல்வன்
கைவண்ணத்தில்....

# செண்பக வனம்

மன்னார்குடி
## ரா. ராஜேஷ்
எழுதும் தொடர் (பகுதி 6)



முன்கதைச் சுருக்கம்

செண்பக வனத்தில் பாம்பணி ஆற்றங்கரை சாலையில் வந்தியத்தேவன் மீது நடக்க இருந்த கொலை முயற்சி தாக்குதலை நமது கதையின் நாயகன் மாணிக்கமும் அவன் தோழன் கரியன் என்கிற புலியும் சேர்ந்து முறியடித்தனர். மறுநாள் செண்பகவனத்திற்கு வந்த ஆழ்வார்க்கடியான் மாணிக்கத்திற்கு ஏற்கனவே அறிமுகம் ஆதலால் இருவரும் மாணிக்கத்தின் வீட்டில் ஓய்வெடுத்துக் கொண்டிருக்கும் சமயத்தில் மாணிக்கம் ஒரு சிலரால் கடத்தப்படுகிறான். கடத்தப்பட மாணிக்கமும் அவனின் நண்பன் கரியன் மற்றும் ஆழ்வார்க்கடியான் துணைகொண்டு வெகு சாமர்த்தியமாக தன்னை கடத்தி வந்தவர்களை கொன்றுவிட்டு ஒருவனை மட்டும் சிறைப்படுத்திக் கொண்டு தஞ்சை நோக்கி பயணமானார்கள்...

ஆதித்த கரிகால சோழன் கொலையில் ஈடுப்பட்ட சதிக்கார கூட்டத்தில் ஒருவன் தான்.

மாணிக்கத்தாலும் ஆழ்வார்க்கடியாராலும் சிறை செய்யபட்ட அந்த கைதி ரவிதாசன் என அறிந்த நொடி முதல் இனி.....

அத்தனை குளிரிலும் அந்த இருவரின் உடலும் வியர்த்திருந்தது.
''ஆழ்வார்க்கடியாரே உண்மையை தான் சொல்கிறாயா? உனக்கு அவன் முகம் இன்னும் ஞாபகம் இருக்கிறதா?'' என்றார் அனிருத்தர்.

''ஐயா என்ன இப்படி கேட்டுவிட்டீர்கள்? இவனை என்னால் எப்படி மறக்க முடியும்? அன்றைய தினம் பள்ளி படையில் இருந்த அனைவரின் முகமும் என்னால் மறக்க முடியாது. அதிலும் குறிப்பாக இவனும் நந்தினி தேவியாரும் அங்கு கூடியிருந்த சதிகார கூட்டத்தில் பேசிய பேச்சுக்கள் என் காதில் இன்னும் ஒலித்துக் கொண்டிருக்கின்றன. இவன் தான், இவனே தான் அந்த ரவிதாசன்'' என்று உரக்கக் கூறினான் ஆழ்வார்க்கடியான்.

''அப்படியானால் ஒன்று செய்யுங்கள், இவனை முழுவதுமாய் சோதனை செய்யுங்கள். நகுலா,குமரா என்ன வேடிக்கைப் பார்த்துக் கொண்டு இருக்கிறீர்கள் வேகமாக விரைந்துச் சென்று வேறு சில விளக்குகள் எடுத்து வாருங்கள்'' என்று சொல்லிக்கொண்டே அனிருத்தர் மாணிக்கத்தையும் கரியனையும் பார்த்தார்.

மாணிக்கமோ தான் முறியடித்த அந்த தாக்குதல் முயற்சி, வந்தியதேவர் மீதானது என்று எப்போது அனிருத்தர் சொன்னாரோ அப்போதே கனவுலகில் சஞ்சரிக்க ஆரம்பித்து

விட்டான். வந்தியதேவர் பற்றியும் அருண்மொழித்தேவர் பற்றியும் அவன் தந்தை அடிக்கடி கூறும் வீர பராக்கிரம கதைகள் பல கேட்டு வளர்ந்தவன்.

போர்க்களங்களில் அவர்கள் எப்படியெல்லாம் வாள் வீசுவார்கள் என்று அவன் தந்தை அவனுக்கு சொல்லியும், அதே போல செய்தும் காட்டி வாள் வீச்சு சொல்லிகொடுப்பார். அவை எல்லாம் அவன் மனக்கண் முன்னே வந்து தோன்றின. ஆனால் கரியன் அங்கு நடக்கும் அனைத்தையும் கவனித்துக் கொண்டிருந்தான். அவன் ‘‘அனிருத்தர் தன்னையும் மாணிக்கத்தையும் பார்க்கிறார், ஆனால் மாணிக்கமோ வேறு ஏதோ நினைவில் இருக்கிறான் என்பதையும் கவனிக்க தவறவில்லை, உடனே தன் வாளால் மாணிக்கத்தை தட்டி சுயநினைவுக்கு கொண்டுவந்தான்‘‘.

சட்டென நடந்த இந்த நிகழ்வால் மாணிக்கம் தூக்கத்திலிருந்து எழுந்தவன் போல விழித்து விழித்துப் பார்த்தான். அதை பார்த்த அனிருத்தர் ஏதோ நினைத்தவராய் குமரனை அழைத்து, ‘‘மாணிக்கத்தையும் கரியனையும் விருந்தினர் அறையில் ஓய்வெடுக்க விட்டு விட்டு  சமையலறையில் யார் இருக்கிறார் என்று பார்த்து இவர்களுக்கு பசியாற ஏதேனும் ஏற்பாடு செய்துவிட்டு சீக்கிரம் வா‘‘ என்றார். மறுவார்த்தை பேசாமல் மாணிக்கமும் கரியனும் குமரனை பின் தொடர்ந்தனர்.

விருந்தினர் அறை அல்ல அது ‘‘விருந்தினர் மாளிகை ‘‘ என்றுதான் சொல்ல வேண்டும் அத்தனை பெரியது, அறை முழுவதும் புதுவித நறுமணம் கமழ்ந்தது, வண்ண வண்ண திரைச்சீலைகளும், தரையெல்லாம் கம்பளமும், இருக்கையிலும் படுக்கைகளிலும் பஞ்சணைகள் நிறைந்திருந்தன.

அறையின் மையத்தில் இருந்த இருக்கையின் முன்னால் அழகிய வேலைப்பாடுடன் கூடிய மேசையில் நறுமணம் உமிழும் புகைகிண்ணமும் அதனருகில் நீர் குவளையும் அலங்கரித்திருந்தது. அறையில் தொங்கி கொண்டிருந்த விளக்குகளின் ஒளி அங்கிருந்த இருளைப் பகலாக்கி கொண்டிருந்தது. ‘‘இருக்கையில் அமருங்கள், இதோ வருகிறேன்‘‘ என்று கூறிய குமரன் சமையலறை நோக்கி நடக்கலானான்.

சட்டென கிட்டியது தனிமை சுதந்திரம் இருவருக்கும். மாணிக்கம் மகிழ்ச்சியும் ஆச்சரியமுமாய் கரியனைப் பார்த்தவாறு இருக்கையில் அமர்ந்தான். வேகமாய் அமர்ந்தவனை உந்தி கொடுத்து இருக்கையை இயல்பாக்கியது பஞ்சணை. அந்த உந்துதல் மாணிக்கத்தை உற்சாகப்படுத்தியது.

சட்டென பஞ்சணையில் ஏறியவன் முன்பக்க கரணம் அடித்து இயல்பாய் தரை இறங்கி கரியனைப் பார்த்து சிரித்தான். கரியனும் அவன் பங்கிற்கு பஞ்சணையில் ஏறி முன் பக்க கரணம் அடித்து மாணிக்கத்திற்கு சவால் விடுவது போல் பார்த்தான். மாணிக்கம் சும்மா விடுவானா! அவன் மீண்டும் பஞ்சணையில் ஏறி பின்பக்க கரணம் அடித்து கரியனை முறைத்தான். கரியன் தான் மட்டும் என்ன சளைத்தவனா என்பது போல் அவனும் பின்பக்க கரணம் முயற்சித்தான். ஆனால், அவனது வால் பட்டு இருக்கையின் முன் பக்கம் இருந்த மேசையில் தண்ணீர் வைத்த பாத்திரங்கள் அனைத்தும் கீழே விழுந்து பெரும் சத்தத்தை உருவாக்கின.

அதே சமயத்தில் குமரனும் சமையல்காரனும் அறையில் நுழைய, அவர்களை பார்த்த கரியனும் மாணிக்கமும் தர்மசங்கடத்தில் சிலையைப் போல நின்றனர். ஆனால் கீழே விழுந்த பாத்திரம் மட்டும் சத்தத்தோடு சுத்தி கொண்டே மெல்ல மெல்ல அடங்கியது. கரியன் ஒன்றும் அறியாத சிறு பிள்ளை போல பாவமாக முகத்தை வைத்துக் கொண்டு தரையை பார்த்திருந்தான். அதைப் பார்த்த மூவரும் வாய்விட்டு சிரித்தனர்.

சமையற்காரர் மாணிக்கத்தைப் பார்த்து, ‘‘தம்பி உனக்கு பாலும் பலகாரமும் பழங்களும் உள்ளன. ஆனால், கரியனுக்கு கொடுக்க என்னிடம் ஒன்றுமில்லை என்ன செய்யலாம்‘‘ என்றார். ‘‘ஏன் இல்லை அதான் பால் இருக்கிறதே அதுவே போதும் எங்களுக்கு கொஞ்சம் அதிகமாகவே கொண்டு வாருங்கள்‘‘ என்றான் மாணிக்கம்.

‘‘சரி சரி மாணிக்கம், நீங்கள் ஓய்வெடுத்துக் கொள்ளுங்கள். காலையில் சந்திப்போம்’’ என்று கூறி விடை பெற்றுக் கொண்டான் குமரன்.

நகுலனின் தம்பி குமரன் வெகு சமீபத்தில் தான் அனிருத்தருக்கு உதவியாய் இருக்க இங்கு வந்தவன். தஞ்சையின் அரசியல் களங்களை புதிதாய் பழகிக் கொண்டிருக்கும் குமரனுக்கு அந்த நடுஇரவு அனுபவம் கொஞ்சம் புதிதாய் இருந்தது. யார் இவர்கள்? ஏன் இந்த நடுஇரவில் மாட்டுவண்டியில் யாரோ ஒருவனை கைது செய்து கொண்டு வந்திருக்கிறார்கள், அவனும் மயக்க நிலையில் இருக்கிறான். ஆழ்வார்க்கடியார் அவரை இரவிதாசன் என்றதும் அனிருத்தர் கூட கொஞ்சம் மிரண்டுதான் போனார். அந்த அளவுக்கு முக்கியமான அந்த கைதி மாறுவேடத்தில் அலைகிறான் என்றெல்லாம் மனதில் பலவாறு எண்ணிக்கொண்டே வந்த குமரனின் கண்கள் கண்ட அந்த கைதியை சோதனை செய்யும் முறை இதுவரை அவன் கண்டிராதது.

கைதியின் ஆடைகள் களையபட்டு அவனது இடுப்பில் மட்டும் சிறு துணி போர்த்தப்பட்டிருந்தது. நகுலன் கையில் விளக்குடன் கைதியின் மீது அங்குலம் அங்குலமாக எதையோ தேடிக்கொண்டிருந்தான். மற்றொருபுறம் ஆழ்வார்க்கடியார் கைதியின் கலைக்கப்பட்ட ஆடைகளை சோதித்துக் கொண்டிருந்தார். அந்த சோதனையில் இதுவரை கிடைத்த சில பொருட்களை அனிருத்தர் பார்த்துக் கொண்டிருந்தார்.

ஒரு சிறிய குத்துவாள், ஒரு அங்குல நீளமும் மெல்லியதுமாய் 3 மூங்கில் குச்சிகள் இருந்தன. அதன் மேலும் கீழும் அடைப்புடன் சாதாரண குச்சிகள் போல இருந்தது. ஆனால் அவைகள் சாதாரண குச்சிகள் அல்ல என அனிருத்தருக்கு தோன்றியது, அதோடு மட்டுமல்லாது நான்கைந்து தங்கக் காசுகள், பத்திருபது செப்புக்காசுகள் அடங்கிய ஒரு முடிச்சும் இருந்தன. வேறொன்றும் கிடைக்கவில்லை ஐயா என்று நகுலனும் ஆழ்வார்க்கடியாரும் அனிருத்தர் முன்பு வந்து நின்றனர்.

சரி விடுங்கள், குமரா என்ன அங்கேயே நிற்கிறாய், இங்க வா! இந்த பொருட்களை எல்லாம் அந்த துணியில் இட்டு கட்டி என் அறையில் வை. நகுலா, ஆழ்வார்க்கடியார் நீங்கள் இருவரும் இந்த கைதியைக் கொண்டு போய் பாதாள சிறையில் அடைக்க செய்யுங்கள். ஆழ்வார்க்கடியார் ‘‘நாளை மாணிக்கத்தை சின்னவர் களத்திற்கு அழைத்துச் செல். அவன் தகுதி சோதிக்கப்பட்டு உனக்கு தகுந்தபடி பயிற்சி அளிக்கத் தொடங்கிவிடும், நான் நாளை பிற்பகலில் சின்னவரை சந்திக்கிறேன் என்று சொல்‘‘. அதைக் கேட்ட ஆழ்வார்க்கடியார்

''அப்படியே செய்கிறேன் ஐயா'' என்றார்.

நகுலனும் ஆழ்வாரும் விறுவிறுப்பாய் செயல்பட்டனர். கைதியின் இடுப்பில் இருந்த துணியை அவனுக்கு இடுப்புக் கச்சையை போல கட்டினர். வாயிலில் இருந்த வீரனை அழைத்து வண்டிக்கு ஏற்பாடு செய்து பாதாள அறையை நோக்கி பயணிக்கலாயினர். குமரன் அவற்றை அப்படியே செய்து முடித்தவுடன் அவர் அறையில் அத்தனை பொருட்களையும் பாதுகாப்பாக வைத்துவிட்டு அவரிடம் விடை பெற்றுக் கொண்டான். சுந்தர சோழரின் முதல் மந்திரி அனிருத்தற்கு ஆதித்த கரிகாலன் கொலையும், அதன் சதிகார கூட்டங்களின் ஞாபகங்கள் அவர் மனக்கண்ணின் முன் விரிந்தது.

பால் குடித்து பசியாறிய மாணிக்கம் விருந்தினர் அறையில் கட்டிலின் பஞ்சணையில் படுத்தான். உறக்கமில்லாமல் தரையில் விரிந்திருந்த கம்பளத்தில் படுத்திருந்த கரியன் மாணிக்கத்தை நோக்கிக்கொண்டிருந்தான். நாள் முழுவதும் இருந்த பயண அலுப்பு, அவனை தூங்க செய்திருக்க வேண்டும். ஆனால் அந்த பஞ்சனை அவன் தூக்கத்தை விரட்டிக் கொண்டிருந்தது. சட்டென எழுந்தான், பஞ்சனையில் மீதிருந்த விரிப்பை எடுத்து கரியனுக்கு அடுத்தாற்போல் விரித்தான். கொண்டு வந்த துணி முடிப்பை தலைக்கு தலையணை போல் வைத்து கண்ணை மூடியவன் தூக்கத்தில் கரைந்துப் போனான். மாணிக்கம் உறங்கியதை உறுதி செய்து கொண்டு கரியன் உறங்கலானான்.

**பயணம் தொடரும் ...**



**ச. அபர்ணா**
இளங்கலை ஆங்கிலம்
முதலாம் ஆண்டு

# சுகப்பிரசவம் காசு தராது



நிரஞ்சன்
மன்னார்குடி

சுகப்பிரசவம் காசு தராது. ஏனெனில் சுகபிரசவம் ஆரோக்கியம் தரும். ஆரோக்கியமான ஒரு உயிரை வைத்துகொண்டு எந்த மருத்துவமும் காசு பார்க்க முடியாது. உயிரை நீட்டிப்பதே மருத்துவம் என்பார்கள். ஆனால் இன்றைய நவீன மருத்துவம் உயிர் மட்டும் இருக்கணும், ஆரோக்கியம் இருக்க கூடாது என்ற உயர்ந்த நோக்கத்தோடும் சேவை மனப்பான்மையோடும் செயல்படுகிறது.

பிரசவத்திற்கு எந்த மருத்துவமும் தேவையில்லை. அலோபதி, ஓமியோபதி, சித்த மருத்துவம், ஆயுர் வேதம் எதுவும் தேவை இல்லை. பிரசவம் இயற்கையானது. இயற்கையின் பிரம்மாண்டம் குழந்தை பிரசவம். ஒரு ஆணும் பெண்ணும் இணைந்து பெண் கருவுற்று குழந்தையைப் பிரசவிப்பது என்பது மனிதன் தோன்றிய காலத்தில் இருந்தே இருக்கிறது. மருத்துவ அறிவு தோன்றுதலுக்கு முன்பில் இருந்தே மனிதர்கள் பிரசவித்துக் கொண்டு தான் இருக்கிறார்கள். ஏன் எல்லா உயிர்களும் பிரசவித்துக் கொண்டு தான் இருக்கிறது. எந்த விலங்கும் மருத்துவமனை சென்று குழந்தைப் பெற்றுக் கொள்வதில்லை. மருத்துவம் பிரசவத்திற்கு தேவையில்லை. இயல்பாக இருந்தாலே இயல்பாக குழந்தை பிறக்கும். அது தானே இயற்கை.

அப்படி எந்த மருத்துவமும் இல்லாமல் தான் சில காலங்களுக்கு முன்பு வரை குழந்தை பெற்று வந்தனர். அனைத்துமே சுக பிரசவங்கள் தான். இங்கு தான் ஒரு கேள்வியை வைக்கிறார்கள். அந்த காலத்தில் மருத்துவ வசதி இல்லாமல் தான் பல குழந்தை இறந்துபோனது, இறந்தே பிறந்தது என்று.

உண்மை தான், அப்போது பல குழந்தைகள் இறந்துவிடும், எனது அப்பத்தா பிரசவித்தது 12 பிள்ளைகள். 6 குழந்தை மட்டுமே தங்கியது. இந்த இடத்தில் தான் நாம் ஒரு இயற்கையின் அங்கம் என்பதை மறந்து நிற்கிறோம். வாழும் தகுதி உடையது வாழும். வாழும் தகுதியற்றது சாகும். இது தான் இயற்கை விதி. இந்த பூமியின் தட்ப வெப்ப சூழலை தாங்கும் சக்தி எல்லா உயிர்க்கும் இருக்காது. எல்லா குழந்தைகளுக்கும் இருக்காது. அவ்வாறு தகுதியற்ற உயிர் சாகும் தான். விலங்குகளிலும் இன்றுவரை அப்படி தான். எல்லா விலங்குகளும் பிழைக்காது பிறந்தவுடன். அதனால் இந்த உலகில் வாழ முடிந்தால் மட்டுமே வாழும். இல்லையேல் இறக்கும். இதை ஏற்றுக்கொண்டு தான் ஆகவேண்டும். பிறப்பையும் இறப்பையும் இயற்கையென ஏற்கும் மனம் வேண்டும். இதுவே இயற்கையின் விதி. இன்னும் சொல்ல போனால் விலங்குகள் ஊனமாக பிறந்தால் தாய் விலங்கே தன் ஊனமான குட்டியை கொன்று விடும்.

12 குழந்தையைப் பிரசவித்த எனது அப்பத்தா இன்று 90 வதிலும் ஆரோக்கியமாக இருக்கிறார். தங்கிய 6 குழந்தைகளும் ஆரோக்கியமாக இருக்கிறார்கள். ஆனால் நவீன மருத்துவம் அன்றே இருந்திருந்தால் 12 குழந்தைகளும் உயிருடன் இருந்திருக்கும். என்

அப்பத்தாவும் உயிருடன் இருந்திருப்பார். ஆனால் 13 பேருமே ஆரோக்கியமாக இருந்திருக்க மாட்டார்கள். சிசேரியன் செய்த எந்த தாய் ஆரோக்கியமாக இருப்பாள்? இறப்பு சகஜமானது. ஆனால் ஆரோக்கியமற்ற வாழ்வு சகஜமானதல்ல.

வாழும் தகுதியில்லாத ஆரோக்கியமற்ற குழந்தையை ஆரோக்கியமே இல்லாமல் உயிருடன் மட்டுமே பெற்றெடுப்பது தான் இன்றைய நவீன மருத்துவத்தின் இயற்கைக்கு முரணான சேவை. இதை தான் இன்று தாய்வழி இறப்பு (mentarnal mortality) குறைந்திருப்பதாக சொல்கிறார்கள். அந்த காலத்தில் குழந்தைகள் இறப்பது போல் இப்போது இறப்பதில்லை, மருத்துவத்தின் வளர்ச்சி என்று சொல்கிறார்கள். ஆரோக்கியமான குழந்தையைப் பெற்றெடுக்க வேண்டும் என்பதே தமிழ் மரபின் நோக்கம். உயிருடன் ஆரோக்கியமே இல்லாமல் பெற்றெடுப்பதே நவீன (அரசாங்கத்தால் திணிக்கப்படும்) மருத்துவத்தின் நோக்கம்.

முறையான உணவு பழக்கங்களால், ஒழுக்கமாக வாழ்ந்து, கர்ப்ப காலத்தில் இயற்கையுடன் ஒன்றி நடந்து ஆரோக்கியமாக தாய் இருந்து ஆரோக்கியமாக பிள்ளையை கருவில் வளர்த்து ஆரோக்கியமாக உலகில் பிரசவிக்க வேண்டும். இவ்வாறு தான் நமது வாழ்க்கை முறை இருந்தது. இதை செய்யாமல் இயல்புக்கு மாறாக வேறு என்ன செய்தாலும் அது குற்றமே. இன்றைய நவீன (அரசாங்கத்தால் திணிக்கப்படும்) மருத்துவம் இந்த குற்றத்தை தான் செய்கிறது. ஆரோக்கியமே இல்லாமல் ஒழுக்கமே இல்லாமல் பொறுப்பே இல்லாமல் ஒரு கணவன் மனைவி இணைந்து கருவுற்று ஆரோக்கியமற்ற ஒரு குழந்தையை உயிருடன் பெற்று கொடுத்து விடுவோம் என்பதே இன்றைய மருத்துவம்.

ஆரோக்கியமான ஒரு தாயை கூட மருந்து மாத்திரைகள் உதவியுடன் ஆரோக்கியத்தைக் கெடுத்து உள்ளிருக்கும் குழந்தைக்கு ஊருவிளைவித்து சிசேரியன் செய்து உயிருடன் தாயையும் பிள்ளையும் தருவது தான் இன்றைய நவீன (அரசாங்கத்தால் திணிக்கப்படும்) மருத்துவத்தின் சேவை.சிசேரியன் ஒரு ஆபத்தான கண்டுபிடிப்பு. உயிரை மட்டுமே காப்பாற்றும். ஒரு பிரயோஜனமும் இருக்காது. அரை உயிராக சாகும் வரை வாழவேண்டும். சிசேரியன் செய்வதே நம்மை இந்த மருத்துவத்துக்கு வாடிக்கையாளர் ஆக்க தான். பிறப்பு உறுப்பின் வழியே பிறக்காத எந்த குழந்தையும் பிறந்தாக அர்த்தம் இல்லை. எந்தவொரு குழந்தையின் பிறப்பும் பிறப்புறுப்பு வழியே தான் நிகழ வேண்டும். குறுக்க பிடித்து அறுத்து எடுப்பதை பிறப்பு என கருத முடியவில்லை.

அனைத்து மருத்துவமும் சிறந்தது தான். ஆனால் நம்மிடம் திணிக்கப்படும் நவீன மருத்துவம் மருத்துவமே இல்லை. அது வியாபாரம். அதை அலோபதி மருத்துவம் என்பார்கள். அது பொய். அலோபதி என்ற ஆங்கில மருத்துவம் ஆங்கில ஏகாதிபத்தியத்தால் ஆக்கிரமிக்கப்பட்டு உலகம் முழுக்க வெறித்தனமான வியாபாரம் ஆகிவிட்டது.

ஒரு குழந்தை பெற்றெடுக்க எந்த மருத்துவமும் தேவையில்லை. இயல்பாக முக்கி பெத்து போடுங்க. நான் ஒருமுறை திருப்பதி சென்றபொழுது மரத்துக்கு மரம் தாவிக்கொண்டு இருந்த ஒரு குரங்கு தன் குட்டியை பிரசவித்தது (மலம் கழிப்பது போல் சாதாரணமாக), அடுத்த கணமே அந்த குட்டியை தூக்கிகொண்டு மரம் மேல் ஏறி ஓடியது.

குரங்கில் இருந்து வந்த நாமும் இயல்பாய் வாழ்ந்து இயல்பாய் குழந்தையை பிரசவிப்போம்.. தாய் ஆரோக்கியமாக இருந்தால் ஆங்கில மருத்துவம் சொல்லும் மாறுநிலை கட்டம்(ஞினூடிஞுடிஞிச்டூ ண்ஞுச்ஞ்னு) ஏற்படாது. அந்த சூழலை உருவாக்குவதே நவீன மருந்து மாத்திரைகள் தான். அதை விட்டு தள்ளியே நிற்போம். ஆரோக்கியமாக வாழ்வோம்.

– நிரஞ்சன், மன்னார்குடி

---

# தொலைந்துப் போன தொட்டி



அருள்பாண்டியன்
பூவனூர்

பருவ மழை தொடங்க இருக்கிறது.

முன்பெல்லாம் மழை நீர் சேகரிப்புத் தொட்டி என்று ஒரு சில வீடுகளிலும், எங்கள் பள்ளியிலும் இருந்தது. இன்று அதை காணவில்லை.

ஒரு திட்டம் அரசு கொண்டு வருகிறது.சில வருடங்களில் அத்திட்டம் செத்து செயலற்றுப் போகிறது.

நமக்கு தேவையானதை நாமே செய்து கொள்ள வேண்டும். இந்த ஆண்டு மழை நீரை வீணாக்காமல் சேகரிக்கலாம். பழையபடி பள்ளிகளில் மழை நீர் சேகரிப்புத் தொட்டி அமைக்க முயற்சிக்கலாம். தங்கள் வீடுகள், அலுவலகங்கள் முழுவதும் அமைக்கலாம். ஆற்றில் நீர் வரத்து இருப்பதால் நிலத்தடி நீர் மட்டம் எளிதாக உயரும்.

ஆறு வற்றினாலும், நிலத்தடி நீர் குறையாமல் இருக்கும். முப்போகம் விளையும் தஞ்சை மண்டலம் வறண்டுப் போகாமல் காக்க இதுவும் ஒரு வழி. அணை கட்டுவதை விட பல மடங்கு எளிதானது இது. நிலத்தடி நீர் மட்டத்தை உயர்த்தினால் போதும். நீருக்காக கையேந்தும் நிலை இராது

திறவுகோல் மூலம் ஓர் மாற்றத்தை ஏற்படுத்த, இங்குள்ளவர்கள் மழை நீர் சேகரிப்புத் தொட்டி அமைத்து அந்த புகைப்படத்தை திறவுகோலில் வெளியிடுங்கள். உங்கள் நீர் சேகரிப்பு குறித்த மற்ற அனுபவத்தோடு முகநூலில் கூட பதிவிடலாம். மற்ற ஊர்களிலும் மாற்றம் வரலாம். மண்ணை மாற்றும் முயற்சியில்
விவசாயி மகன்!

# பெண்மை....!!

பல வலிகளைத் தன்னுள்
சுமந்துக் கண்ணீர்களை
விழிவாசலில் தேக்கி வைத்துப்
புன்னைகைக்கும் பேரன்புக்
கொண்ட பொக்கிஷ
தாரகைகள் பெண்கள் .....!!!!

பேதை, பெதும்பை, மங்கை,
மடந்தை, அரிவை, தெரிவை,
பேரிளம்பெண் என்று பல
பரிமாணங்களில்
வாழ்வியல் முறைகளை வகுத்து
கொடுக்கும் வாழ்வியல்
கலைஞர்கள் ...!!!!

உதிரத்தின் இன்னல்களை
இன்முகத்தோடு ஏற்றுக் கொண்டு
வாழ்வில் பெண்மையை உணர்ந்து,
துணைவியாக ஒரு ஆண்மகனை
திருமணம் முடித்து அவள்
கணவனின் ஆண்மையை
நிலைநாட்ட, தாய்மையை அடைய,
தவ வாழ்வு இருந்து, சேய் என்ற
ஒரு வரத்தை உலகிற்கு
அறிமுகப்படுத்தும் தியாகிகள்....!!!!

துணைவி என்ற பந்தத்தில்
ஒரு கருவியைப் போல்
இயங்கி பிள்ளை கணவன்,
மாமியார், மாமனார் என்று
பணிவிடை செய்து துவைத்துக்
கொடுத்து
அலுப்பிலும் ஓய்வின்றி கணவனின்
சுகத்திற்கு மறுப்பு தெரிவிக்காத
மாணிக்கமாய் திகழ்பவர்கள்....!!!

பல ஆசைகள், பல கனவுகளை
எல்லாமே
தன் தாரம் என்ற ஒரு
காரணத்திற்காக
தாரை வார்த்து தன் சுக
துக்கங்கள் எல்லாம்
சமையலறையிலே என்றும்
வாழும் சலனம் இல்லாத
சலங்கைகள்....!!!

என்ன தான் வேதனைகளும் வடுக்களும்
மனதிலிருந்தாலும் ஒரு போதும் மனம்
தளர்ந்ததில்லை.
குடும்பத்தின் பெரும் தூணாய்,
குடும்பத்தின் அனைத்தையும் தாங்கி
தன் சிறகுகளை தன் பிள்ளைகளுக்கு
கொடுத்துப் பறக்க சொல்லி அழகு
பார்த்துத்
தாய்மை மேன்மைபடுத்திப்
பெண்மையை
பெருமைப்படுத்தும் போராளிகளாக
என்றும் வாழ்த்துக் கொண்டு இருக்க
கூடிய
நிகழ்கால குடும்பவியல் போராளிகள்
தான்
பெண்கள் ஆதலால்....!!!

பெண்மை என்ற ஒரு இலக்கணம்
இல்லை என்றால் ஆண்மைக்கு
ஆண்மையை நிலைநாட்ட
இங்கு அங்கீகாரமே இருக்காது....!!

பெண்மையை மதிப்போம்
போற்றுவோம்....!!!

நன்றி....!!

உங்கள் **கவிஞன் தீன்**
பொதக்குடி

# கடவுளான தந்தை

ஆயிரம் கடவுள்
இருந்தாலும்
நம்மை
ஆளாக்கிய கடவுள்
அப்பா....

நான் பிறக்கும் போது
உன் முகம் தெரியாது
எனக்கு....
நான் தவழ்ந்து வரும் போது
தலை கால் புரியாது
உனக்கு....

கடைக்கு போய்ட்டு
நீ வருகையில
ஓடி வந்து கதவோரம்
உன்னை பார்ப்பேன்...
கட்டி புடிச்சி
கண்ணத்த நீ கடிச்சா
எட்டி ஒதச்சி
நான் அழுவேன்....


ஏறு பூட்டி நீ உழுதா
எட்டி எட்டி உனை
பார்ப்பேன்...
பத்து நிமிசம்
என்ன பாக்கலனா,
பதறி போய் நீ வருவ

ஆளாக்கி பார்த்து விட்ட,
ஆலமரமாய் வளர்ந்து
விட்டேன்.
ஆண்டவனை நான்
பார்த்தது
இல்லை,
எனக்காய்
ஆண்டவனாய்
மாறிவிட்டதால்....

மறு பிறவி நான்
எடுப்பேன்,
உன் மகனாய்
நான் பிறப்பேன்....
என்றும்
உன்
நினைவுகளுடன்
அன்பு மகன்



S.S. கார்த்திக், DME
உள்ளிக்கோட்டை



S. முத்துவேல்
எட்டாம் வகுப்பு
மாடர்ன் நடுநிலைப் பள்ளி
மன்னார்குடி

# எட்டு வழி சாலையா ?
# துட்டு தரும் சாலையா ?

காடு மலை மேடுகளை
கழனிகளாக்கி,
கண்ணீர் வர பாடெடுத்து
பயிர்கள் வளர்த்து
பாடுபட்ட இனம் தானே
எம் தமிழினம்

சொந்த நாட்டில்
அகதிகள் போல்
எம் தமிழ் மக்களை
கார்ப்பரேட்டுகள்
வசதிக்கும் வாழ்வுக்கும்
கொல்லாமல் கொல்லுவது
எந்நியாயம்?

பயிரிடவே முடியாத
நிலத்தை கூட
பண்பட்ட நிலமாய்
மாற்றியபோது
கோடிகளைக் கொண்டு வந்துக்
கொட்டவில்லையே ?
கூட இருந்து ஒரு கூடை
மண்ணையும் சுமக்கவில்லையே ?

எத்தனை ஆயிரம்
ஏக்கர் நிலம் ?
யார் தாத்தன் வீட்டு சொத்து ?
அத்தனையும் வாரி
சுருட்டி விட்டு
சிமெண்டாலும் தாராலும்
போட்டு விட்டு
நிலமகளை சமாதியாக்கும்
திட்டங்களை
மக்களும் தான்
உணர்ந்தே உள்ளனர்.

எடுக்கின்ற நிலங்களை
கையகப்படுத்தி மக்களுக்கான
திட்டங்களென அறைகூவல்
அறிக்கை விட்டு
காசு கமிசன்
கணக்கு பார்த்து
பல்லிளிக்கும் மானங்கெட்ட
மாநில மத்திய
தரகர்களே!

நிலம் விற்பது
இங்கே வழக்கத்தில்
ஒன்றுதான்,
ஆனாலும் வாங்கியவன்,
பயிர் வளர்ப்பான், பாடுபட்டு
மண் வளமும் காத்திடுவான்.

வாங்கிய நீ என்ன செய்வாய் தரகனே!
நீளமான சமாதி கட்டி
அதன் மேலே
கார் விடுவாய்!
மலையுடைத்து
கல்லாய்,
மணலாய்,
கடத்தி செல்வாய்,
காசு பார்ப்பாய்,
கமிசன் பார்ப்பாய்.

போராடும் மக்களுக்கு
போராளி என பெயருண்டு,
போராளிகள் தோற்பதில்லை.
போடுகின்ற சாலைகளை
அவர்கள் மீது போடாதே

உங்களால் போராடி
புதையுண்டு போனவர்கள்
சினங்கொண்டு
எழுந்தாலே
உங்களது சிமெண்ட் சாலை
சிதறி விடும்!

தார்ச்சாலை
தளர்ந்து விடும்

மக்களுக்கு பணத்தாசை
காட்டாதே!
எடுக்குற நிலங்களுக்கு
நிறைய கொடுக்கலாம்,
பணப்பித்து சிலருக்கும்
இருந்து தொலைக்கலாம்.

மண்ணிற்க்கு
உயிர் விடுவோர்
இங்குமுண்டு.
அவர்மீது சாலை போட்டு
பேரெடுக்க பார்க்காதே
பேரே இல்லாமல்
போய் விடும் -நேரம் வரும்

உங்கள்
கமிசன் அரசியல்
அடுத்த தேர்வுக்குள்
காலாவதியாகிவிடும்

எட்டு வழி சாலை
எப்போதும் தேவையில்லை

– இலக்கியா இளவரசன்

---

# காவிரித்தாய்

பட்டினத்தார் பாட்டிலும்
புலவர் பலர் ஏட்டிலும்
குடியிருக்கும் எங்கள் காவிரித்தாயே...

நின் வருகையில்லா நாட்களிளெல்லாம்
வறண்டுக் கிடந்தது எங்களின் வயலும்
வயிறும் மட்டுமல்ல..

எங்கள் விழிக் கண்ணீரும்தான்
வறண்டே கிடந்தது.
நின் வழித்தட மார்பினில் சுரந்திடும்
நீரினை நின் மக்களுக்கு
வந்தளித்திடுவாயே எங்கள்
காவிரித்தாயே...

எதிர் நீச்சல் போடுவது மீன் குஞ்சுகள்
மட்டுமல்ல! எங்கள் காவிரித்தாயே
நீயும் தான்
ஆம் ஆட்சியாளர்கள் கபட நாடகம்
ஆடினார்கள், செயற்கையாய் அதனை
உடைத்தெறிந்து ஓடி வந்தாய்
இயற்கையாய் எந்நிலையிலும்
தன்னிலை! மறந்து தடம் மாறா எங்கள்
காவிரித்தாயே

உனை சிறைப்பிடிக்க முயல்பவர்களே
சீரழிந்துப் போவார்கள் என்பதனை
பாவம் அவர்கள் அறிந்திருக்க
மாட்டார்கள்!
உனது வருகையால்தான் நஞ்சைகளும்
புஞ்சைகளும்
வளம் கொழிக்கவேச் செய்கிறது எங்கள்
காவிரித்தாயே........

வணங்கி மகிழ்கிறோம் காவிரித்தாயே....



சீதாரம் சங்கர்
உள்ளிக்கோட்டை

# நான் அழைத்த முதல் நண்பனின் பெயர் தமிழ் மணி...!

நட்பின் மொழியை கற்று தந்தவன்
நட்பின் வலியை உணர்த்திவிட்டான்!

எங்கள் வீட்டுப்பிள்ளையாக சுற்றித்
திரிந்தவன் இன்று எல்லைகள் கடந்து
சென்றுவிட்டான்....!

தென்னை மட்டை வெட்டி கிரிக்கெட்
மட்டை செய்து பயிற்சி தந்தவன் இன்று
மூச்சிரைத்து விட்டான்....!

என் சிறுவயது முதல் பழக்கமும்
நீயே-பல நட்பிற்கான துவக்கமும்
நீயே...!

என் வாழ்வில் இது மிகப்பெரிய
சோகம்-உன் முகத்தை கூட பார்க்க
விடாமல் அப்படி என்ன என் மீது
கோபம்...!

கண்விழிக்கும் முன்னே எனக்காக
காத்திருப்பாய் அதிகாலையில்...!

என்னிடமிருந்து உனை பிரிக்க
காத்திருந்ததோ விதி சாலையில்....

என் மீது கோபத்தில் கவனம் செலுத்திய
நீ -வேகத்தில் கவனம் செலுத்த மறந்தது
ஏனோ...?

சூழ்நிலை கைதியாக உனக்கு எதிராக
நின்றேனே தவிர-ஒருபோதும் உன்னை
எதிரியாக நினைத்ததில்லை....!

கலங்கடிக்கிறது என்னை உன்
புகைப்படம்....!



மணிபாரதி தங்க சுந்தர்

இனி யாரையும்
வெறுக்காதே
என்று சொல்லி
தருகிறது பாடம்...!

பாரடா நம்
தலைகணத்தின்
தவறை.......

கண்முன்னே
உருவத்துடன் நின்றபோது உன்னிடம்
பேச வார்த்தையில்லை....!

உயிரற்று நீ மண்ணுக்குள் சென்றபின்
உனை தவிர பேச வார்த்தையில்லை....?

மகிழ்ச்சியை மட்டும் தந்த என் மாமனின்
மகனே...!

அனைத்திற்கும் சேர்த்து அதிர்ச்சியை
தந்துவிட்டாயேடா அருமை நண்பனே...!

இதுவரை கண்முன்னே கோபக்காரனாக
காட்சி தந்தவன்-இன்று மிகப்பெரிய
ரோசக்காரன் என்று நிரூபித்து
விட்டான்...!

கடைசிவரை என்னிடம் பேசாமலேயே
போய்விட்டீயேடா.....!

# ‘பாவ’பட்டதாரி

படிச்சதெல்லாம் போதுமுன்னு பாதியிலேயே நிறுத்தியிருந்தால், வீதியிலே கூழ் விக்கனுமுன்னு விதியிருந்திருக்காது!

வேலைவாய்ப்பு அலுவலகங்கள் சிபாரிசு கட்டிலில் மயங்கிக் கிடக்க, இரவோடு இரவாக அரசு வேலை உறுதி செய்யப்படும் அவலம் இருக்காது!

சட்டங்களும் சாயம் வெளுத்து நிற்கையில், பட்டங்கள் முடித்தும் பயனின்றி இருக்காது!

ஆயிரம் கேள்விகள், ஆயிரம் பதில்கள் சந்தர்ப்பங்களும் சூழ்நிலைகளும் கூட சில தருணங்களில் சாவில் தள்ளும், நெருக்கடி இருந்து இருக்காது!

லட்சங்கள் சிலரிடம் புரளுவதும், லட்சியங்கள் பலரிடமும் எரிக்கப்படும் துயரம் இருந்து இருக்காது!

ஏறுவரிசை இறங்கு வரிசை கற்பிக்க வேண்டிய வாய்கள், முதல் மாடிக்கும் மூன்றாம் மாடிக்கும் இடையில் சித்தாளாய் சிக்கிக் கிடக்கும் சோகம் இருந்து இருக்காது!

தவறாமல் புதுப்பிப்பதும் தனியாருக்கு இரையாவதும் அவர்களின் வாடிக்கையாக தான் போகும் என்ற நிலைமை இருந்து இருக்காது!

பட்டமும் சட்டமும் ஒன்றுதான் இரண்டுமே பயனற்றுப் போகும் என ஆருடம் தெரிந்து இருக்காது!

வழியறியா பாமரனுக்கு, கொலையையும் கொள்ளையையும் காலம் கற்றுக் கொடுத்து விடுமோ இந்த பாவ’பட்ட’தாரிக்கு!!

– மேலவாசல் செங்குட்டுவன்

# கம்பனிடம் ஓர் கேள்வி!!

இராப்பகலாய் பாடுபட்டு
இராசகவி ஆனவனே!!
தமிழ் என்னும் கடலுக்குக்குள் தரை
வரைக்கும் போனவனே!

சூத்திரம் போல் பாட்டு எழுதும்
சுகக்கவியே!
சொல்லுக்குள் வாக்கியத்தை
சுருக்கிவச்ச
கவிப்புலவா!
அசோக வனத்தில் இருந்து
அழுதாளே,
அவளை கண்ணால் பார்க்கலயே
கவி மட்டும்
சொன்னாயே!

உன் மகன் அம்பிகாபதி அழுக,
அமராவதி அழுக!
கம்பா நீ அழுக கணக்கெதுவும்
காட்டலையே!!
கடவுள் காதலை கதை கதையாய்
கூறினவனே,
மனுசக் காதலை நீ மரியாதை
செய்யலையே..
ஊமை வெயிலுக்கு உருகிவிடும்
வெண்ணெய் நீ!
உன்னிடமா கேள்வி நான்
கேட்பது!!

– இ.சி. ராஜபாரதி

# ஊர்க்காவடியும் சொந்த பந்தமும் ....

சித்திரை மாசம் ஆனாலே
கருணையுள்ளம் கொண்டவளே
மாரியம்மா பாடல் ஓடாத கிராமமே
இருக்காது .....

திருவிழா மூணு நாளு நாள் நடந்தாலும்
எல்லாரும் எதிர்பார்ப்பது காவடி
என்னைக்குனு தான்.....

எல்லா சித்தி,மாமி அவங்க புள்ளைங்க
எல்லாரும் வந்து உட்கார்ந்து முதல்
நாள் இரவு பூக்கட்றதுலேருந்து
ஆரம்பிக்கும் திருவிழா.

யாரு கோவிலடிக்கு போனாலும்
காராசேவு பொட்டணம் வாங்கி
கொடுக்க ஒரு ஆள் தயாரா இருக்கும்.

விடிய விடிய கொறவன் குறத்தி
ஆட்டம்.
வீட்டுல உள்ள நண்டு சுண்டு, கெழடு
கட்ட எல்லாம் பாய் எடுத்துக்கிட்டு
கோவிலடிக்கு போய்டும்.

மறு நாள் காவடி... மொத நாள்
பொம்பளைங்கல மட்டும் அனுப்பி
வைச்ச மாப்பிளை எல்லாரும் வந்து
நிப்பாங்க வீட்ல.!

நெல் அவிக்கிற குண்டான்ல கள அரிசி
போட்டு மூணு ஆளு காய்கறி வெட்ட,
சாப்பாடு தடபுடலா தயார் ஆகும்.

வீட்டு பொம்பளாளுக்கு தெரியாம
காரைக்கால் சரக்கு வந்து இறங்கும் ஒரு
பக்கம்

முக்கியமான ஆளு ஒன்னு, ஏலேய்ய்
எனக்கு ஒன்னு எடுத்து வைங்கடா
அப்டினு ஒரு பக்கம் சத்தம் வரும்

யாராச்சும் பார்த்து முறைக்க,
கூட்டத்துல குடிக்காத பெரியப்பா
ஒருவர், விடு ஒரு நாளைக்கு என்பார்

காவடி எடுக்குற ஆளு மஞ்ச
கால்சட்டை போட்டு ஏத்தி சீவி அர
ஈரத்தோட பட்ட போட்டு வந்தாலே
,ஒரு மிடுக்கு வரும்

அதுக்கு அப்பறம் பள்ளயம் போட்டு
ஒவ்வொரு காவடிக்கும் பால் சொம்பு
கட்டி கொட்டு அடிக்க
ஒவ்வொருதருக்கா அருள் வரும்

அதுலயும் ஒன்னு உண்டு. வசதி
படைத்தவனுக்கு புதுக்கோட்டை தப்பு,
வசதி இல்லாதவனுக்கு கொட்டையூர்
மற்றும் உள்ளூர் தப்பு

முள்ளு குத்தி முதல் அடி எடுத்து
வைப்பது முதல் கோவில் போய் காவடி
இறக்குற வரைக்கும் காவடியை சுத்தி
ஆடிக் கொண்டு போய் சேர்க்க
வேண்டியது மச்சினன் மற்றும்
நண்பர்கள் பொறுப்பு

ஒரு மர ஸ்டூல் , பனை விசிறி மட்டை
தூக்கிகிட்டு ரெண்டு ஆளு
பின்னாடியே வரும், பால் கொடம்
முன்னாள் போக

அதுலயும் காவடி அடினு ஒன்னு
இருக்கு, அந்த அடி அடித்தால்

கிழவனுக்கு காவடி ஆட்டம் வரும். தோல் மேல் ரெண்டு கம்பியையும் பிடித்து ரோட்டை அளந்து எல்லாரு கொடம் கொடமா தண்ணீர் ஊத்த ஆடுற ஆட்டம் இருக்கே சொல்லி மாளாது

கோவில் போய் சேர்ந்து காவடி இறக்கி வைச்சி சாமி கும்புட்ட உடனே ரெண்டு பெருசு ஒடியாந்து, நான் போறன்யா, ஊர்ல பத்து ஆளு களை எடுக்குதுனு சொல்லி நூறு ரூபாய கைல வைச்சி மல்லு காட்டும்.

உடனே காவடி எடுக்குற ஆளு காச வாங்காது, என்ன அவசரம் வீட்ல வந்து சாப்பிட்டு போனு கடைசி வரைக்கும் காச வாங்க மாட்டங்க...

எவ்வளவு சாராயம் குடிச்சாலும் அன்னைக்கு என்னவோ மீனுக்கு பதிலு கொழம்புல மெதக்குறது சித்திரை மாசத்து மாங்காவா தான் இருக்கும்

அதுக்கு அப்புறம் மாவிளக்கு மாவு, இரவு ஆர்கெஸ்ட்ரா, மறுநாள் திரைப்படம் அப்டினு கடந்து போகும்

அந்த காவடி எடுத்த ஆளு ரெண்டு நாள் காயம் ஆற வரைக்கும் சட்ட போடாது. அப்பறம் வம்படி எடுத்து மாட்டி தண்ணி பாய்ச்ச கிளம்பிடும் வயலுக்கு

இன்றும் சில கிராமங்களில் இவை அனைத்தும் மாறவில்லை. குறிப்பாக என்னை வளர்த்த வல்லான் குடிக்காடு!



- தினேஷ் குமார் மாரியப்பன்
டெல்டாகாரன்

# அழகு குட்டிச் செல்லம்

கிருஷ்ணரின் பெயரில் உன் பெயர் அமைந்ததாலோ என்னவோ சேட்டைகள் பல செய்கிறாய்!

சஷ்டியில் பிறந்ததால் முருகனின் அம்சத்தைக் கொண்டிருக்கிறாய், வாழ்க்கையை எண்ணி சோர்ந்த நொடிகளில் உன் மழலைச் சிரிப்பால் என்னை மீட்டெடுப்பாய்!

எதை நோக்கி இந்த வாழ்க்கை பயணம் என்ற மன வினாவிற்கு, நான் சிகரத்தைத் தொட நீ வழித்துணையாக வரவேண்டும் என்பதை உன் மழலை எனக்கு உணர்த்தியது, என் அழகு குட்டிச் செல்லமே...!

- ம . மணிமொழி, திருராமேஸ்வரம்

# மருத்துவ அனுபவம்



ராணிச்சந்திரன்
மன்னார்குடி

ஆங்கில மருத்துவம் பார்த்துக் கொண்டிருக்கும் ஒரு நோயாளி எங்களிடம், உள்ளே சாப்பிட மருந்து எதுவும் வேண்டாம், மேலே தடவிக் கொள்ள வழிப்போக்கும் எண்ணெய் கொடுங்கள் என்று வாங்கி செல்வார். 6 மாதம் அப்படியே சென்றது. உள்ளே ஆங்கில மாத்திரைகள் 7 வருடங்களாக சாப்பிடுகிறார். ஒருநாள் சென்னையில் அவர் வழக்கமாக காட்டி வந்த ஆங்கில மருத்துவர் ‘‘நாளைக்கு மருத்துவமனையில் சேர்ந்துக் கொள்ளுங்கள், இரத்த நாளங்களில் கொழுப்பு அடைந்துள்ளது, உடனே அறுவை சிகிச்சை செய்ய வேண்டும், 5 லட்சம் ரூபாய் கட்ட வேண்டும்‘‘ என்றார்.

அவர் தந்தை 3 ஆண்டுகளுக்கு முன்பு பித்த பையில் கல் இருப்பதை எடுப்பதற்கு அறுவை சிகிச்சை செய்த போது இறந்து விட்டார். அந்த பயம் வந்து விட்டது. மரண பயம் தானே மக்களை பாடாய்படுத்துகிறது. உடனே எங்களை வந்து சந்தித்தார். என் இரண்டு பெண் குழந்தைகளுக்கும் அம்மாவாகிய நான் அவர்களுக்காக உயிரோடு இருக்க வேண்டும். அறுவை சிகிச்சை இல்லாமல் உங்கள் மருந்தில் என்னை குணப்படுத்த முடியுமா? என்று கேட்டவர் கண்களிலிருந்து கண்ணீர் பெருகியது. நாங்கள் ஒரு மருந்து தருகிறோம் அதை சாப்பிடுங்கள்.

அதில் உங்களுக்கு திருப்தி இருந்தால் நீங்கள் எங்களிடம் மருத்துவம் செய்து கொள்ளலாம் என்று கூறினோம். நாங்கள் கொடுத்தது பேதி மருந்து. சாப்பிட்ட பிறகு உடம்பில் மிக பெரிய மாற்றத்தை உணர்ந்தார். 3 மாத காலத்தில் முழுமையாக குணமடைந்தார். 4 வருடங்களாக பாத்திரம் கழுவுதல், துணி துவைத்தல், வீடு துடைத்தல், தண்ணீர் தூக்குதல், அனைத்திற்கும் வேலை ஆள் வைத்திருந்தார். இப்போது அனைத்து வேலைகளையும் அவரே செய்கிறார். நாங்கள் மருந்துடன் சேர்த்து அவர் வாழ்க்கை முறையை (life style) மாற்றினோம். அது தான் மருந்தை விட வேகமாக குணப்படுத்தியது. எப்படி சாப்பிடுவது? எதை சாப்பிடுவது? எப்போது சாப்பிடுவது? இதை கற்றுக்கொடுத்தோம்.

உணவு, உழைப்பு, உறக்கம், உடலுறவு, எண்ணம் இதில் ஓர் விழிப்புணர்வை கொடுத்தோம். வாந்தி, பேதி, சுரம் அனைத்தும் நோய் அல்ல, ணீச்டிண டிண் ஞ்ச்டிண என்பதையும் தெளிவாக உதாரணத்தோடு புரியவைத்தோம். இப்போது ‘‘என் மகள்களை மட்டும் அல்ல என் பேர பிள்ளைகளை கூட நானே பார்த்துக்கொள்வேன். என் உடல் ஆரோக்கியமாக இருக்கிறது. உள்ளுறுப்புகள் அனைத்தும் நன்றாக வேலை செய்கிறது. பிறகு என் உயிர் ஏன் எனது உடலை விட்டு போகப்போகிறது?

என் உடல் தூய்மையாகவும் ஆரோக்கியமாகவும் இருக்கும்போது

அதற்குள் சுழன்றுகொண்டிருக்கும் உயிர் ஆனந்தமாகவே இருக்கும்'' என்று அவர் பேசுகிறார். அவர் உடலில் உள்ள கழிவு தேக்கத்தை நீக்கம் செய்த ஒரே சிகிச்சை தான் நாங்கள் செய்தது. அலோபதி மருத்துவம் அறுவை சிகிச்சை தேதி கொடுத்தாலோ, இல்லை பார்க்க முடியாது என்று கைவிடப்பட்டாலோ, அதற்கு பிறகு எங்களிடம் வரும் நோயாளிகள் தான் நாங்கள் கிழித்த கோட்டை தாண்ட மாட்டார்கள்.

சொன்னதை அப்படியே கடைப்பிடித்து விரைவில் குணமடைந்து விடுவார்கள். அங்கே பாதி இங்கே பாதியாக நிற்பவர்களை குணப்படுத்த நீண்ட காலம் ஆகிறது. நான் மீண்டும் மீண்டும் வலியுறுத்தி சொல்கிறேன், வெளியிலிருந்து வரும் பிரச்சனைகளுக்கு ஆங்கில மருத்துவம் செய்து கொள்ளுங்கள். உள்ளிருந்து ஏற்படும் பிரச்சனைகளுக்கு உடல் என்ன சொல்கிறதோ அதை கேளுங்கள். அது தன்னை தானே சரி செய்துகொள்ளும்.

அதாவது இயக்க சக்தியை நிறுத்தி, செரிமான சக்தியையும் நிறுத்தி, நோய் எதிர்ப்பு சக்திக்கு வழிவிடுங்கள். முடியவில்லை என்றால் உங்கள் உடல் கழிவுகளை நீக்கம் செய்ய உங்கள் உடலுக்கு பொருத்தமான உந்து சக்தியை கொடுக்கும் பாரம்பரிய மருத்துவர்களிடம் சென்று ஆரோக்கிய வாழ்வு வாழ வாழ்க வளமுடன் என்று வாழ்த்துகிறேன்.

– ராணிச்சந்திரன்



கிறிஸ்ட் நெப்போலியன்

# பெண்

சுவாசப் பையின் மூச்சை முறித்து
கருவில் சுமந்து புது சுவாசம் தந்த
அம்மா
அண்ணனை அன்புக்கு
அடிமையாக்கும் - தங்கை
தம்பியை தாயாக அரவணைக்கும்
அக்கா
தோல்வியையும் வெற்றியாக்கும்
தோழி
குடும்ப பாரம் சுமக்கும் ஆண்
மகனை
நித்தம் தன் நெஞ்சில் சுமக்கும்
மனைவி
உலகையே வாங்கும் உத்வேகம்
தரும் மகள்

இப்படியாக உறவுகளில் உலா வரும்
உன்னத படைப்பு பெண்மை.
முள்ளில் வாழ்ந்தாலும் கூட,
சிரித்துக் கொண்டிருக்கும்
ரோஜாக்கள் பெண்கள்.

பிரச்சனைகள் கோடி தேடி வந்து
நின்றாலும்
அர்ச்சனைகள் கோடி ஆண்டவனுக்கு
சமர்ப்பணம்.
சபலப்பட்டுத் தடுமாறிய உள்ளம்
அல்ல,
சஞ்சலம் துரத்தி சாதிக்க தெரிந்தது
பெண்ணின் மூளை.

இன்பமும் துன்பமும் சமம் என்று
நினைத்து
போராடும் குணம் சிறப்பு.
வேகமும் விவேகமும் சமமாக
கொண்டு
நித்தம் நடைபோடும்
இலட்சியவாதிகள்!

கிழக்கு வெளுத்தது முதல் மேற்கு
சிவக்கும் வரை
உழைக்கும் பெண்ணின் கரங்களில்
ஓய்வில்லை.
தோல்விகள் துரத்தி வந்து நின்றாலும்
எதிர்த்து நின்றுப் போராடி வெற்றி
காணும் வீரமங்கைகள்.

போராட்டம் எனத் தெரிந்தும்
போராடிப் பார்க்கலாம்
என்ற கர்வம் பெண்ணின் சிறப்பு!
நிமிர்ந்த நடையும் நேர்கொண்ட
பார்வையும் என்ற
பாரதியின் வரிகளுக்கு உயிர்
கொடுப்போம்!

பெண்ணவளின் உணர்வுகளை
மதித்துப்
பெண்மையைப் போற்றுவோம்!

--
**பொன்மணி வள்ளுவன்,**
கீழத்திருப்பாலக்குடி.


# மூத்தகுடி - தொன்மை மறவேல்



பாலாஜி பிரசாத்

பொய்அகல நாளும் புகழ்விளைத்தல் என்வியப்பாம்!
வையகம் போர்த்த வயங்கொலிநீர் - கையகலக்
கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே வாளோடு
முன்தோன்றி மூத்த குடி.

அதாவது ஆரவாரித்து ஒலி எழுப்பிய ஊழிக்கடல் நீர் விலகிச் செல்ல மலை தோன்றியது. மண் உருவாகாமல் (மருத நிலம் உருவாகும் முன்னர்) குறிஞ்சி நிலமாக உலகம் இருந்த காலத்தில் வாளைக் கையில் பிடித்து வீரத்துடன் போர் புரிந்த மறவர் குடி தமிழ்க்குடி என்று பெருமையுடன் நம் குடியின் வரலாற்றை உலகிற்கு எடுத்துச் சொல்லும் பாடல் இது.




தொல் குடி என்று பெருமை கொள்ள கூடிய நம் தமிழ் குடி இயற்கையைக் கடவுளாக வணங்கி வந்தனர் (நீர், நிலம், தீ, காற்று, விசும்பு). பின்னர் அவர்கள் தங்களுடன் வாழ்ந்து சென்ற மூத்தகுடி மக்களைக் குலதெய்வமாக வணங்க முற்பட்டனர். முப்பாட்டன் வழிபாடே பின்னர் குலதெய்வ வழிபாடாக மாறியுள்ளது.


மேல காட்டியுள்ள படம் நம் ஒவ்வொருவரின் முன்னோரின் 7 தலைமுறையின் வகையைக் குறிக்கிறது. நாம் இன்று இந்த பூவுலகில் வர காரணமானவர்கள், மேலே கூறிய 126 மூத்தகுடி. நாம் இன்று செய்யும் நன்மை, தீமைகள் நம் சந்ததியின் அடுத்த ஏழு தலைமுறைக்கு வரும் என்ற முன்னோர்களின் கருத்து இதுவாக இருக்குமோ?

ஒரு மனிதனின் வாழ்க்கையில் குடும்பம் என்பது மிகவும் முக்கியமான ஒன்றாகும்.

குடும்பம் என்று வந்து விட்டால் அன்பான உலகைக் காட்டும் அன்னையும், வீரமும் அன்பும் அரவணைப்பும் ஆளுமையும் காட்டும் தந்தையும், தங்கைக்காக எதையும் விட்டுக் கொடுப்பது அண்ணனின் பாசம், அண்ணனின் தவறுக்குத் தாயிடம் திட்டு வாங்கும் தங்கையின் பாசம், தனக்குப் பிடித்ததைத் தன் தம்பிக்குக் கொடுத்து அழகுப் பார்ப்பது

அக்காவின் பாசம், மனைவி மற்றும் குழந்தைகள் என அனைவருமே ஒரு மனிதனுக்கு மிக முக்கியமானவர்கள். நம் வாழ்க்கையில் இன்பத்திலும் துன்பத்திலும் நம்முடன் முதலில் கை கொடுத்து நிற்பது நம் குடும்பத்தாரே. அனைவரின் வாழ்க்கையிலும் இது பொருந்தும்.

பாரம்பரியமும் கலாச்சாரத்திலும் பன்மடங்கு சிறந்து விளங்குவது நம் தமிழர் கலாச்சாரமும் பண்பாடும் தான் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை. இதனை பிற நாட்டவரும் ஏற்றுக்கொண்டு அவர்களும் அதனை கடைபிடிக்க விரும்புகின்ற இன்றைய கால கட்டத்தில் நாம் அதனை தூரம் தள்ளும் நிலையை எண்ணும் போது கொஞ்சம் வருத்தமாகவே உள்ளது.




கூட்டுக் குடும்பம்!!! இந்த வார்த்தை இன்று அரிதாகி வருகிறது. தாத்தா, பாட்டி, சித்தி, சித்தப்பா, மாமா, அத்தை, பெரியம்மா, பெரியப்பா, இதுவே தமிழ் குடும்பம்.
முற்காலத்தில் கூட்டுக் குடும்பமாய் வாழ்ந்துக் கொண்டிருந்த நம் கலாச்சாரம், மேற்கத்திய கானல் கலாச்சாரத்தில் மயங்கி, இன்று தனித்தனி தீவாய் வாழ்கிறோம். தனித்திருத்தல் ஒருவித சுகம்தான். அதில் எவ்வித மாற்றுக்கருத்தும் இல்லை. ஆயினும் சேர்ந்திருத்தல் தரும் சுகமோ, தனியொருவனுக்கு பாதுகாப்பு தருவதோடு மட்டுமல்லாமல் சமுதாயத்திற்கும் பெருமையைத் தருகிறது.

சுழலும் பூமியும் தன்னை மட்டுமே சுற்றிக் கொண்டிருந்தால் என்னவாகியிருக்கும்? அது சூரியனிடம் ஒருவித ஈர்ப்பு விசையோடு இருப்பதால் தானே, உலகமும் விலகாமல் ஒரு பாதையில் சுற்றிக் கொண்டிருக்கிறது. உயிர்களையும் விடாது பற்றிக் கொண்டிருக்கிறது. முன்பெல்லாம் குழந்தைகளுக்கு அறிவு, வீரம், அறிவியல், மருத்துவம், நம் பண்பாடு மற்றும் நாகரிகம் போன்றவை தாத்தா, பாட்டி கதைகள் மூலம் புகட்டப்படும், ஆனால் இன்றைய நிலை? எந்த குழந்தைகள் தாத்தா, பாட்டி, கதைகளைக் கேட்க முடிகிறது, எந்த முதியவர்களுக்கு வயசான காலத்தில் பிள்ளைகள் நம்மை காப்பாற்றுவார்கள் என்ற நம்பக தன்மை வலுவாக இருக்கிறது?
இன்றைய காலகட்டத்தில் குடும்ப அமைப்பு மாறி கொண்டே வருகிறது. முன்பெல்லாம் குடும்பம் என்றால் அது பெரிய கூட்டுக் குடும்பமாக ஒரே வீட்டில் வசித்து வந்தார்கள்.

ஆனால் அது இப்போது அடியோடு மாறி விட்டது. இப்போதுள்ள குடும்பங்கள் எல்லாம் சிறிய எண்ணிக்கையில் சின்ன சின்னதாக மாறி விட்டது. ஆனால் இன்றைய நிலையோ? கூட்டு குடும்பம் என்ற வார்த்தை இன்று அழிந்து வருகிறது. இதனால் யாருக்கு என்ன பயன்??? இதனால் அதிகம் பாதிக்கப்படுவது குழந்தைகளும், பெரியவர்களும் தான். மண்ணுக்கு மரம் பாரமா, மரத்துக்கு கிளை பாரமா, கொடிக்கு காய் பாரமா பெற்றெடுத்த குழந்தை தாய்க்கு பாரமா என்றொரு பாடல் நினைவுக்கு வருகிறது.

அந்தப் பாடலில் கூட பெற்றவர் குழந்தைக்கு பாரமா என்னும் கேள்வி எழுப்பப்படவில்லை.

இப்படி ஒரு பெரிய மாற்றங்கள் ஏற்பட, என்ன தான் காரணம் என்று நாம் தெரிந்துக் கொள்ள வேண்டாமா? இன்றைய கால கட்டத்தில் கூட்டுக் குடும்பம் என்பது என் போன்ற பல பேருக்குக் கனவாகவும், சில பேருக்குச் சுமையான பிரச்சனையாகவும் மாறி விட்டது என்பதில் ஐயமில்லை. பெரிய அளவில் மாற்றங்கள் இருக்கும்போது அது ஏன் அவ்வகை மாற்றங்களை அடைந்துள்ளது என்பதை கவனிக்க வேண்டிய சூழலுக்கு நாம் அனைவருமே தள்ளப்பட்டுள்ளோம்.

நாம் வளர்த்த நாட்டு நாய், கோழி, மாடு, பண்படுத்திய எண்ணெய், மஞ்சள், வேம்பு, உப்பு, தண்ணீர், காற்று, நாட்டு விளையாட்டு, ஜல்லிக்கட்டு,விவசாயம், நம் நாட்டு வைத்தியம் என இப்படி பலவற்றை இழந்துக் கொண்டு இருக்கும் வரிசையில் இன்று கூட்டுக் குடும்பமும் சேர்ந்துள்ளது. வளர்ச்சி என்பது நம் வாழ்வியல் தேவையான ஒன்றாக இருக்கும் சூழலில் அது ஆபத்து இல்லை, ஆனால் வாழ்வியலே கேள்விக்குறியாகும் போது அது தேவையா? நம் முன்னோர்களின் வாழ்வியல் இயற்கையோடு சார்ந்த ஒன்றாக இருந்தது. ஆனால் நம் நவீன வாழ்வியல் செயற்கையான ஒன்றாக (இயற்கைக்கு புறம்பான) இருப்பதே ஆபத்து.

பன்னாட்டு நிறுவனங்களின் வணிக யுக்தியாலும், நாம் அயல்நாட்டின் வாழ்வியல் மேல் நாம் கொண்ட மோகத்தாலும் பெரும் பணம் மற்றும் பகட்டு வாழ்வின் மேல் கொண்ட மோகம் இன்று இந்தியாவில், குறிப்பாக தமிழ் மண்ணில் கூட்டுக் குடும்ப வாழ்க்கை சிதைந்து வருவதாக ஒரு ஆய்வுக் கட்டுரைப் படித்தேன். 200 ஆண்டு ஆங்கிலேய ஆட்சியில் நாம் இழந்ததை விட இந்த 70 ஆண்டு சுதந்திர இந்தியாவில் நாம் நம் தொல் கலாச்சார, பண்பாட்டை இழந்ததே அதிகம்.

நாகரிக வளர்ச்சியால் நம் நாட்டில், நம் முன்னோர்கள் நம்மோடு வாழும்போது அவர்களை சுமையாக கருதுகிறோம். இந்தியாவில் 60 வயதை தாண்டிய நிலையில் 4 சதவீத முதியோர்கள் உள்ளனர். இதில் 75 சதவீதம் பேர் கிராமங்களில் உள்ளனர். போதிய வருமானம் இல்லாத, நோயால் பாதிக்கப்பட்ட முதியோர்கள் மட்டுமே தனித்து விடப்பட்டுள்ளனர். சொத்து, வருமானம் உள்ள முதியோர்கள் குடும்பத்தினருடன் இருந்தாலும் பல இன்னல்களை அனுபவித்து வருகின்றனர். அனைவரும் முதியோர் இல்லங்களை வெறுப்பதும் ஆய்வில் தெரியவந்துள்ளது. நம்மிடம் நிலவும் மேற்கத்திய மோகத்தால் பன்னாட்டு நிறுவனங்கள் தங்களது பொருட்களை விற்க பல யுத்திகளைக் கையாள்கின்றனர். இவற்றை வாங்குவதில் இன்றைய தலைமுறையினருக்கு கூட்டுக்

குடும்பம் பெரும் இடையூறாக உள்ளது. இதனால் முதியோர்களை கை கழுவிவிட்டு தனிக்குடித்தனத்தை விரும்புகின்றனர். ஆனால் நம் நாட்டின் வளர்ச்சியில் முதியோர்கள் ஆலோசனை அவசியமாகிறது.
–
எந்த ஒரு பொருளும் அதன் பயன்பாட்டுக்குப் பிறகு இருக்கும் இடம் தெரியாமல் போய்விடுவதே நியதியாக உள்ளது. இதுவே உலகமயமாக்களின் ஒரு முகம். இந்த முகத்தை இன்று பன்னாட்டு நிறுவனங்களில் வேலை செய்யும் ஒவ்வொருவரும் மெதுவாக உணரவும் ஆரம்பித்து உள்ளோம். ஆனால் நாம் உறவுகளுக்கு இடையே இந்த நிலைப்பாட்டைத் திணிக்க நினைப்பது, தமிழர்கள் நமது முன்னோர்களின் சிந்தனைக்கு முரணான ஒன்று.

இன்றும் பெருவாரியான தமிழ் வீட்டில் தாங்கள் உணவு அருந்தும் முன் காக்கைக்குச் சோறு வைக்கும் பழக்கம் உண்டு. நான் சிறுவனாக இருந்தபோது எனது முன்னோர் கூறியது, நமது முன்னோர்கள் காக்கை வடிவில் வந்து அன்னத்தை ஏற்றுக்கொள்வதாக, ஆனால் நான் இன்று தமிழ் மொழியின் வழி பார்க்கும்போது காக்கையின் தனிச்சிறப்பு. தனக்கு உணவு கிடைத்தால் தான் மட்டும் உண்ணாது தான் சுற்றும் கரைந்து அழைத்து கூட்டத்துடன் உண்ணும். இன்றைய அறிவியல் உலகமும் காக்கையைப் பறவை இனத்தில் அறிவு கூர்மையுள்ள பறவையாக ஏற்றுக்கொண்டுள்ளது. இது அன்றே நம் முன்னோரும் உணர்ந்துள்ளனர். முல்லைக்கு தேர் கொடுத்தான் பாரி, குளத்தில் மீன்களுக்கு உணவிட பொறி வழங்கியது. எறும்புக்கு உணவிட வீடுகளில் அரிசி மாவில் கோலம் போட்டது என்றும் விலங்குகள், பறவைகள், உயிரற்ற பொருள்களுக்கும் மரியாதைத் கொடுத்த சான்றோன்.

அவன் வழிவந்த நாம் இன்று இந்த நவீன உலகத்தில் அவன் காட்டிய பரிவும், கனிவும் சக மனிதர்களுக்கும், பெற்று வளர்த்து ஆளாக்கிய பெற்றோர்களுக்கும், தாத்தா – பாட்டிகளுக்கும் கிடைக்கிறதா என்பது கேள்விக்குறியே.

பயன்படுத்திவிட்டு தூக்கிப் போடும் உயிரற்ற பொருள்கள் மீது கூட நம்மில் வெகு சிலரே இன்றும் இறக்கும் காட்டுகின்றனர். பயன்பாட்டில் இருந்தபோது அது ஏற்படுத்திய நினைவுகளின் தாக்கம் நீங்காமல் இருப்பதால் வருத்தப்படுபவர்களும் உள்ளனர்.

இந்த நிலைதான் அனாதை காப்பகங்களும், முதியோர் காப்பகங்களும் உருவாக காரணமாகிறது. பெரியவர்களும் குழந்தைகள் தான் என்பதை நம்மில் பலர் உணர மறுக்கிறோம். எல்லாவற்றிற்கும் ஒரு முடிவு உண்டு. இன்றைய இளைஞன் நாளைய முதியவன் என்பதை நாம் மறக்க கூடாது. மறக்கவும் முடியாது.

கூட்டுக் குடும்பமுறை சிதைந்து விட்டதால், தற்காலக் குழந்தைகளின் சிந்தனையோட்டமே மாறிப்போய் விட்டதாக தெரிவிக்கின்றன. பல தற்கொலைகளுக்கும், மனநோய்களுக்கும் காரணமே இந்த கூட்டுக் குடும்ப சிதைப்பு தான்.

இன்று நாம் பணம் என்ற போதையில் வேலைக்கு அடிமையாகி ஏன் ஓடுகிறோம் என்று தெரியாத நிலைக்கு தள்ளபட்டுள்ளோம். ஒருபுறம் பிள்ளைகள் நம் அன்புக்கும்

பாசத்துக்கும் ஏங்க, மறுபுறம் நம் பெற்றோர்களும், முன்னோர்களும் கனிவுக்கும் பரிவுக்கும் ஏங்க, நடுவில் நம் உடல் வருத்தி நம்மையும் தொலைத்துக் கொண்டு தவிக்கிறோம். சுவர் இருந்தால் தான் சித்திரம் வரையமுடியும். நாம் நலமாக இருந்தால் தான் எதையும் செய்ய இயலும். படைத்தல், காத்தல், அழித்தல் என்பதை நாம் அனைவருமே நன்கு அறிவோம். அது எனது பார்வையில் இறந்தகாலம் (முன்னோர்), நிகழ்காலம் (நாம்), எதிர்காலம் (பிள்ளை) என்ற இந்த மூன்றையுமே இழக்கும் சூழலில் உள்ளோம். நகரங்களில் தனிமையில் வாழும் முதியோர்கள், வீட்டுக் காவலர்களிடம் காலை எழா விட்டால், வெளிநாட்டில் வாழும் தங்கள் பிள்ளைகளுக்கு தெரிவிக்கும்படி கூறிவிட்டு தினமும் உறங்க செல்லும் நிலை பார்க்கும் போது கண்ணீர் வருகிறது.

ப்ரி கே.ஜி. வகுப்பு பிரேயர் கூட காட் பிளெஸ் மம்மி.. காட் பிளெஸ் டாடி.. மேக் தெம் ஹாப்பி..! என மனித மனங்களைப் போல சுருங்கிப் போய்விட்டன..! இந்த நிலை மாற இனி வரும் தலைமுறைக்கு நம் முன்னோர்களின் வாழ்வியலை நம் அடுத்த தலைமுறைக்கு இயன்ற அளவு தெரிவித்துச் செல்ல முயற்சி செய்வோம்.
யாதும் ஊரே யாவரும் கேளிர் என்றுரைத்த கணியன் பூங்குன்றனார் கூற்றாகட்டும், வேற்றுமையில் வேறுவேறாய் பிரிந்து கிடந்த நம்மை நோக்கி, ஒற்றுமையின் ஒப்பில்லா பலனை உணர்ந்தே மீசைக் கவிஞன் பாரதியும், ஒன்றுபட்டால் உண்டு வாழ்வே, நம்மில் ஒற்றுமை நீங்கில் அனைவர்க்கும் தாழ்வே என்றார். ஒற்றுமை இல்லையெனில் கிடைத்திருக்குமா சுதந்திரம்? நம் முன்னோர்களும் கூடியிருத்தலின் நலம் கருதியே தனி மரம் தோப்பாகாது ஒரு கை தட்டினா ஓசை வராது இரண்டு கை தட்டினால்தான் ஓசை வரும் ஊரு கூடி(னா)த்தான் தேரு இழுக்க முடியும் என்ற பழமொழிகள் தெளிவுறுத்துகின்றன.

ஒற்றுமையின் பலத்தையும் மூத்தகுடி தொன்மை அறிந்தே ஔவை பாட்டி கூறினார், ஊருடன் கூடிவாழ், தந்தைதாய் பேண், நன்றி மறவேல், தொன்மை மறவேல், அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம், மூத்தோர் சொல் வார்த்தை அமிர்தம். ஐ. ய்யன் திருவள்ளுவர் ஒப்புரவு அறிதல் என்ற அதிகாரம் இயற்றியுள்ளார்.

நாமும் சிறுவயதில் நான்கு காளையும் ஒரு சிங்கமும், சிறு குச்சி எளிதாக ஒடிக்க முடியும் கொத்தாக இருக்கும் குச்சிகளை ஒடிக்க முடியாது, புறாவும் வேடனும் என்று தாத்தா பாட்டி நமக்கு சொல்லிசென்ற கதைகளின் வழியாக ஒற்றுமையின் மேன்மையை உணர்ந்தே வாழ்ந்தோம். ஆனால் இடையில், சுயநலமிக்க சில இடைத்தரகர்களால், பெருபண முதலைகளின் பேராசை மற்றும் அரசியல் சூழ்ச்சியால் நம்மில் ஒற்றுமை நீங்கி, வேற்றுமையுடனும், வெறுப்புடனும் மேலான வாழ்க்கையை, ஏதோ மேம்போக்காக வாழ்ந்துக் கொண்டிருக்கிறோம்.
வீடோ, நாடோ அனைத்திலும் ஒற்றுமை என்பது வேண்டும். ஒற்றுமை இல்லையெனில் வீடும் நாடும் சீரழிந்துவிடும். இதனை,
ஒன்று பட்டால் உண்டு வாழ்வு
என்ற பழமொழி எடுத்துரைக்கின்றது.

ஒன்றுபட்டுச் செயல்பட்டால் அனைவரும் வாழலாம். இல்லையெனில் அனைவருக்கும் அழிவு என்பது உறுதி. இதனையே இப்பழமொழி எடுத்துரைக்கின்றது.

இவ்வுலகில் ஒவ்வொன்றும் கூடும் போதும், கூடியிருக்கும் போதும்தான் நன்மை தருகிறது.
கூடியிருக்கும் கற்கள்தான் காட்டாற்று வெள்ளத்தை தடுத்து நிறுத்துகிறது.
கூடியிருக்கும் தாள்கள்தான் புத்துணர்வு. தரும் புத்தகமாகிறது.
கூடியிருக்கும் செடி, கொடி, மரங்கள் தான் மனதிற்கு இனிய சோலைவனமாகிறது.
கூடியிருக்கும் தென்னங்குச்சிகள்தான் கூட்டிப் பெருக்கும் துடைப்பமாகிறது.
கூடியிருக்கும் பூக்கள்தான் தோளேறும் பூமாலையாகிறது.
கூடியிருக்கும் நல்ல பாக்கள்தான் நாவேறும் நல்ல பாட்டாகிறது.
கூடியிருக்கும் இசைக்கருவிகள்தான் தலையசைக்கும்படி இசையமைக்கிறது.
கூடியிருக்கும் சிறுதுளிகள்தான் தாகம் தீர்க்கும் தண்ணீராகிறது.
கூடியிருக்கும் சோற்றுப்பற்கள்தான் பசியாற்றும் படையலாகிறது.
கூடியிருக்கும் குடும்பங்கள் தான் நல்ல பல்கலைக்கழகமாகிறது.
கூடியிருக்கும் போதுதான் ஒவ்வொன்றும் பேரின்பம் தருகிறது.

ஒருவருக்கொருவர் அன்புடன் நடந்துக் கொண்டு, எதுவாக இருப்பினும் விட்டுக்கொடுத்து நடந்தால் அக்குடும்பம் மகிழ்ச்சியான பூங்காவாக இருக்கும். மேலும் அக்குடும்பத்தை அனைவரும் உயர்வாக மதிப்பர். இதனை உணர்ந்து குடும்பத்தில் ஒற்றுமையுணர்வுடன் நடந்துக் கொள்ள வேண்டும்

குறையில்லா மனிதர்கள் யாருமில்லை. எல்லோரிடமும் ஏதேனும் குறைபாடு இருந்து கொண்டே இருக்கின்றது. வேற்றுமைகளைப் பெரிதுப்படுத்திப் பார்த்தால் வாழ்வில் ஒன்று சேர்ந்து யாரோடும் வாழ முடியாது. வேற்றுமையில் ஒற்றுமை கண்டு வாழ்வது தான் வாழ்க்கையாகும். இந்தியத் திருநாட்டில் இன்றைய தேவையாக வேற்றுமையில் ஒற்றுமை என்பது இருப்பது குறிப்பிடத்தக்கது. இதனை,

அஞ்சுவிரலும் ஒண்ணாவா இருக்கு? என்ற பழமொழிகள் எடுத்துரைக்கின்றன.

ஐந்து விரல்களும் ஒன்று போலிருந்தால் எந்த வேலையையும் செய்ய முடியாது. அதுபோன்று நாம் அனைவரும் ஒன்று போலிருந்தால் குடும்பத்தில் இயக்கம் என்பது இல்லாது போய்விடும். வேறுபட்ட சிந்தனை, செயல்பாடுகள் உடையவர்களாக நாம் இருப்பினும் அதிலும் ஒற்றுமை உடையவர்களாக இணைந்து வாழ வேண்டும் என்ற அறநெறியை இப்பழமொழி எடுத்துரைக்கின்றது.

இயற்கை ஒன்றிணைந்து இருப்பது போல் மனிதர்களாகிய நாமும் ஒருவருடன் ஒருவர் இணைந்து ஒற்றுமையுடன் வாழ வேண்டும். இவ்வாறு வாழ்வதால் குடும்பம், உறவு, ஊர், நாடு, உலகம் ஆகிய யாவும் மகிழ்வுடன் திகழும். களிப்பு ஆங்கு களிநடம் புரியும். ஒன்றுபட்டு வாழ்வோம். உயர்ந்து நிற்போம் வாழ்க்கை வசப்படும்.

இன்று கண்ணுக்கு தெரியாத இறைவனைத் தேடி, ஜோசியம், பரிகாரம் என்று பணம் செலவு செய்வதைக் காட்டினும் குலதெய்வமாக கருதப்படும் நம் நிகர் காலத்தில் நம்மோடு வாழும் மூத்தகுடியான நம் பெற்றோர்களை எல்லா தருணமும் மகிழ்ச்சியாக வைத்துக்கொள்வதே எனது பார்வையில் நம் முன்னோர் சொன்ன குலதெய்வவழிபாடு. இதையே ஔவை தாயில் சிறந்த கோவிலும் இல்லை தந்தை சொல்மிக்க மந்திரம் இல்லை என்றார் போலும்.

நல்லதொரு குடும்பம் பல்கலைக்கழகம், ஒருமைப் பாடில்லாத குடி ஒருமிக்கக் கெடும் எனவே கூடி வாழ்ந்தால் கோடி நன்மை என்னும் கூற்றுப் படி வாழ்வாங்கு வாழ்வோமாக.

(குறிப்பு: இக்கட்டுரைக்காக பயன்படுத்தப்பட்டுள்ள இரண்டு படங்களும் இணையத்தில் இருந்து பெறப்பட்டது. படத்தை வடிவமைத்தவர்களுக்கு திறவுகோலின் நன்றிகள்)

– மன்னை பாலாஜி பிரசாத்

---

# நான் செய்த தவம் வீண் போகாது என்றும்

நல்ல ஆசிரியர் கிடைப்பதற்கு என்ன
தவம் செய்தேனோ
போன ஜென்மத்தில்!

நான் செய்த தவம் சிறு துளியும் வீண்
போகாமல் இன்று நல்ல ஆசிரியர்
கிடைத்து விட்டார்.

அருகாமையில் உள்ள குழந்தைகளை
என் பிள்ளை என்று சொன்னால் வதந்தி
பேசும் இவ்வுலகில் பெற்றவரே உங்கள்
பிள்ளையை போல் பார்த்துக்கொள்ள
வேண்டும் என்று கூறும் இடம் அந்த
நல்ல ஆசிரியரிடம் தானே!

தூணிலும் துரும்பிலும் இருப்பது கடவுள்
என்றால் என் எண்ணத்திலும் எழுத்திலும்
இருப்பது கடவுள் அன்றோ!

என் வெற்றிக்கு மறைமுக காரணமாய்
இருப்பதும் அவர் தானே
உன்னால் முடியும் என்ற ஒற்றை
வார்த்தையில் மற்றவரின் புகழ்பாட
காரணியாய் அமைந்திட்டார்.

நன்றி சொல்லி நான் வாழ்த்த போனால்
நான் இல்லை உன் புகழ் பாட!
காரணம், உன் கடின உழைப்பு என்று
சொல்லிவிட்டு மெல்ல நடை
போட்டியிடுவார்.

மாணவர்களை புரிந்து கொள்ளுங்கள்
வழி தெரியா பாதையிலே கண்டெடுத்த
கால் தடம் போல் ஆசிரியர் ஒருநாளும்
வழி தவறி போக விட மாட்டார்.

நமக்கு அம்மா சோறு ஊட்டி வளர்த்தால்
என்றால் ஆசிரியர் அறிவோடு
பகுத்தறிவும் ஊட்டி வளர்த்து உள்ளார்.

அது என்றும் மாறுவதுமில்லை,
தேய்வதுமில்லை.
இவ்வரிகளுக்கு காரணமும் அவர் தான்,
காதலனும் அவர்தான்!

இவ்வரிகள் நல்ல ஆசிரியருக்கு மட்டுமே
சொந்தமாகும் என்று கூற சிறிதெனினும்
தயக்கம் இல்லை எனக்கு!

சே. அபிநயா

# எதற்கு

மரத்தை அழித்து
மறுபெயர் வைத்தார்கள்
மாடர்ன் சிட்டி என்று!

பசுமை நிறைந்த இடத்தில்
பட்டா போட்டீர்கள்!
இதற்கு பசுமை நகரம்
என்று சொன்னார்கள்!

விளைந்த நெற்கதிர்களை கழித்து விட்டு
விலையுயர்ந்த கட்டிடங்களைக் கட்டி விட்டு
விலைப்பட்டியலைப் போட்டு விட்டு
விளம்பரங்களைச் செய்து விட்டு
மாநிலம் மாறி வந்து விட்டு
மாங்கா மரங்களை வீழ்த்தி விட்டு
மாறன் மார்பில் குத்தி விட்டு
எல்லைகள் ஒன்றைப் பதித்து விட்டு
எங்களிடமே சொல்கிறாய்
போய் விடு உன் ஊர விட்டு என்று!

ஒரு குடம் நீர் இல்லை எனக்கு!
ஒரகடத்தில் மட்டும் இடம் எதற்கு?

ஆ.மோகன் குமார்
நீடாமங்கலம்

# கண்களுக்குள் ஆயிரம் கனவுகள்...

வீட்டின் வறுமை
என் கனவுகளை
கண்களுக்குள்ளே,
சிறை வைத்தது!

நடுத்தர குடும்ப மனிதர்கள்

பாலாஜி கலைச்செல்வன்

# அன்னை

ஐயிரு திங்கள் பக்குவமாய் காத்திருந்து
ஈன்றெடுத்த பகல் நிலா!
என் புன்முறுவலை கண்டு மெய்சிலிர்த்த
பல்லவன் சிலை!
நான் தவழ தலை சாய்த்த
தஞ்சை கோபுரம்!
நான் கண் விழித்தேன்
அன்னை ஆனாய்!
தலை நிமிர்ந்தேன் நீ தோழி ஆனாய்!
என் கல்லறையில் நீங்காத நினைவானாய்
என்றும் என் உயிரானாய்!

- தமிழ் சரவணன்

# நான் யார்?



மகாலெட்சுமி

இந்த தலைப்பில் குறிப்பிடப்பட்டிருக்கும் ''நான்'' என்னை பற்றி கூறுவதற்கென்று மாறாக ஒவ்வொரு தனிமனிதனாகிய நம்மைப் பற்றி கூறுவதற்கு. இதனைப் படிக்கும்போது உங்களை நீங்களே ஒரு கேள்வி கேளுங்கள், ''நீங்கள் யார் என்று?'' அதற்கு உங்களின் பதில் ''நான் ஒரு மனிதன்'' என்பதை தவிர வேறு எதுவாக இருப்பினும் கட்டாயமாக தொடர்ந்துப் படியுங்கள். ஆம், சிலவற்றை எத்தனை பேர் எத்தனை முறை எடுத்துக் கூறினாலும் நம் மனம் அதனை எளிதில் ஏற்றுக்கொள்வதில்லை. காரணம் அறியாமை அல்லது நாம் வளர்ந்த சூழல், நமது சமூகம், நம்மை சுற்றியிருக்கும் மனிதர்கள். இவை அனைத்தையும் பொறுத்து வேறுபடுகின்றது. ஒரு சில விடயங்களை பலமுறை சொல்லும்போது அது முழுமையாக மற்றவர்களை சென்றடையும் என்பதை விட படிப்படியாக அவர்களின் மனதில் பதியத் தொடங்கும்.

நான் முன்பு குறிப்பிட்டது போல் ஏன் உங்களது பதில் ''நீங்கள் மனிதன்'' என்பதை தவிர வேறாக இருக்கக்கூடாது? என்பதனை விளக்குகிறேன். இம்மண்ணில் பிறந்த நாம் அனைவருமே பத்து மாத காலம் தாயின் கருவறையில் உருவாகி முழுமையாக உருப்பெற்று மனிதன் என்ற தோற்றத்திலேயே பிறக்கிறோம். பிறக்கும்போது இவ்வுலகில் யாருமே எதனையும் தம்முடன் கொண்டு வருவதில்லை. அது எவ்வளவு பெரிய பணக்காரராக இருப்பினும், ஏழையாக இருப்பினும், எந்த சமயமாக இருப்பினும், எந்த சமூகத்தை சேர்ந்தவராக இருப்பினும், எப்பேர்பட்டவராக இருப்பினும் பிறக்கும்போது எதுவுமே சொந்தமற்று தான் பிறக்கிறோம். பின் இறக்கும்போதும் ஆறடி பள்ளத்தைத் தவிர நமக்கென்று வேறு எந்தவொரு சொத்தையும் நாம் எடுத்துச் செல்லவும் போவதில்லை.

இந்த பிறப்பு மற்றும் இறப்பு இவற்றுக்கிடையில் நாம் வாழும் இந்த வாழ்க்கையை ஏன் கடினமாக்கிக் கொள்கிறோம். நாம் வாழும் இந்த வாழ்க்கையில் எத்துணை சண்டைகள், சச்சரவுகள். இந்த உலகில் பிறந்த அனைவருமே தனித்துவம் படைத்தவர்கள். ஒவ்வொருவருக்கும் அவரவர் வாழ உரிமை இருக்கிறது. அதனை தரம் பிரிக்கவோ, மாற்றி அமைக்கவோ மற்ற மனிதர்கள் எவருக்கும் உரிமை இல்லை.

நம் சமுதாயத்தில் பல்லாண்டு காலமாக தொன்றுதொட்டு வரும் ஒரு விடயம் ''சாதி''. இதனை பல்வேறு தலைவர்கள் முற்பட்டு அழிக்க முயற்சித்தபோதும், இது முழுமையாக இன்றும் அழிக்கப்படவில்லை. ஆனாலும் இன்னும் சிலரின் மனதில் ''சாதி என்பது ஒரு அடையாளமாக, பெருமையாக, கர்வமாக போற்றப்படுகிறது''. இதனை தவறென்று கூறுவதற்கு எனக்கு உரிமையில்லை. ஏனெனில் நான் ஏற்கனவே குறிப்பிட்டது போல ஒவ்வொருவரும் தனிமனிதர்கள். அவரவர், அவரவர் விருப்பம்போல் வாழ உரிமைக் கொண்டிருக்கின்றனர்.

இந்த இடத்தில நான் சமீபத்தில் காண நேர்ந்த ஒரு காணொளியை பதிவு செய்ய விழைகிறேன். ''நீயா நானா'' என்ற ஒரு புகழ்பெற்ற நிகழ்ச்சியின் ஒரு சிறிய காணொளியை எனது முகநூல் பக்கத்தில் கண்டேன். அந்த நிகழ்வில் இருத்தரப்பினருள் ஒருவர் ''சாதியை ஆதரித்தும்'' மற்றவர் ''சாதியை எதிர்த்தும்'' வாதிட்டனர். அதில் இயக்குனர் ''கரு. பழனியப்பன்'' சிறப்பு விருந்தினராக அழைக்கப்பட்டிருந்தார். அவர் கூறிய ஒரு விடயம் அனைவரின் மனதையும் நெருடலுக்குள்ளாக்கியது. இன்றும், சில இளைஞர்களில் சிலர் தனது ''சாதியின் பெயரை'' தன பெயருடன் இணைத்துச் சொல்வதில் பெருமைக் கொள்கிறார்கள்.

அவர் கூறியவை வருமாறு, தமிழர்களுக்கு ஒரு பண்புள்ளது. அதாவது தமிழர்களாகிய நாம் யாரையும் பார்க்க வைத்து சாப்பிட மாட்டோம். எதுவாக இருப்பினும் மற்றவருடன் பகிர்ந்துண்ணும் பண்புடையவர்கள் தமிழர்கள். ஆனால் நமது மூதாதையர்களோ செய்யும் தொழிலின் அடிப்படையில் சாதி பிரிவினைகளை ஏற்படுத்தி வைத்துள்ளனர். அதை இன்றும் சிலர் அறியாமையினால் பின்பற்றுகின்றனர். அந்த சாதி பிரிவினைகள் நாளடைவில் மேல் சாதி, கீழ் சாதி என்றானது. இயக்குனர் கரு. பழனியப்பன் அங்குள்ள மக்களை பார்த்து வினவுகிறார்.

தமிழர்கள் உணவை கூட மற்றவர்களை பார்க்கவைத்து உண்ண மாட்டார்கள், ஆனால் ஒரு சிலர் தனது சாதியினை வெளியில் சொல்ல முடியாத பட்சத்தில் நீங்கள் அனைவரும் அவர்களை பார்க்க வைத்து உங்கள் பெயரின் பின்னால் உங்கள் சாதி பெயரை சேர்த்துக் கொள்கிறீர்கள் என்று. எதிரணியில் பேசியோரில் பலர் அந்த இயக்குனரின் பக்கம் சென்றனர். அந்த நிகழ்ச்சியில் ஒரு நெகிழ்ச்சியான தருணம் உண்டானது.

இதனை ஏன் கூறுகிறேன் என்றால் நாம் அனைவருமே இரத்தம் சிவப்பு நிறத்திலேயே கொண்டுள்ளோம்.அனைவருக்குமே ஒரே மாதிரியான உடலமைப்பு தான் உள்ளது. இதில் உயர்ந்தவர் தாழ்ந்தவர் என்று எவர் உள்ளார்? நம்மை படைத்தவர் நம்மில் வேறுபாடு காண்பிக்காத போது நமக்குள் நாமே வேறுபாடு பார்ப்பது ஏனோ?

''சாதிகள் இல்லையடி பாப்பா குலத்
தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் பாவம்''

இந்த பாரதியின் வரிகளை நமது மனதில் விதைத்த பள்ளிகளே ''சாதி''யை பிள்ளைகளிடத்து கேட்பதும், சாதி வாரியாக பிள்ளைகளுக்கு ''உதவித்தொகை'' அளிப்பதுமே அப்பிஞ்சுகள் மனதில் ''சாதி''யை விளைவிக்கும்.
சாதியை பிள்ளைகளிடத்து கேட்பதும், சாதி வாரியாக பிள்ளைகளுக்கு ''உதவித்தொகை'' அளிப்பதுமே அப்பிஞ்சுகள் மனதில் ''சாதி''யை விளைவிக்கும்.

இந்த சட்டமானது முதலில் மாற வேண்டும். ஆம், பிள்ளைகளுக்கு ''சாதி'' வாரியாக உதவித்தொகை அளிப்பதற்கு பதிலாக உண்மையிலேயே எவர் குடும்ப வருமானத்தில் பின்தங்கியவர் என்பதை அறிந்து உதவிப் புரிந்தால் தான் அது நலியோருக்கு உதவிகரமாக அமையும். உரியவருக்கு உதவி சென்று சேர வேண்டுமெனில் சட்டம் சற்று மாற்றி அமைக்கப்பட வேண்டும்.

இன்னொரு காணொளியை பற்றி விளக்க விளைகிறேன். சமீபத்தில் காண நேர்ந்த காணொளி அதுவும். அதில் ஒருவர் ஒரு பகுதியில் சென்று அங்குள்ளவர்களிடம் கேட்கிறார் ‘‘உங்கள் சாதி என்ன?’’ என்று கேட்கிறார். சிலர் எனக்கு சாதி என்று ஒன்று கிடையாது என்று கூறுகின்றனர், சிலர் நான் என் சாதியை பெருமையாக கூறுவேன் என்று தனது ‘‘சாதி பெயரைக்‘‘ கூறுகின்றனர். நான் யார் மனமும் புண்படுவதற்காக இதனை கூறவில்லை. இதனை கண்டு என் மனம் புண்பட்டதால் கூறுகிறேன்.

இளைஞர்களாகிய நாம் ஒன்றை புரிந்துக் கொள்ள வேண்டும். மனிதர்களில் உயர்ந்தோர் தாழ்ந்தோர் என எவரும் இல்லை, அனைவருமே சமம் தான். அக்காலத்திலாவது தொழில் வாரியாக சாதியை பிரித்துக்கொண்டனர். ஆனால் இக்காலத்தில் எவருமே அவர் மூதாதையர் செய்த தொழிலை செய்யவில்லை. அனைவரும் அவரவர் கல்வித் தகுதிக்கேற்ற தொழிலை தான் செய்கின்றனர். அப்படிப் பார்த்தால் தற்போதைய நிலைக்கு மருத்துவர், பொறியாளர், ஆசிரியர், மென் பொறியாளர், என்று பல்வேறு தொழில்களுக்கு ஏற்ப வேவ்வேறு சாதிகள் உருவாகியிருக்க வேண்டும். ஆதலால் பழமையை துறந்து புதுமையை ஏற்றுக்கொள்வோம்.  எல்லா விதமான தொழில்நுட்ப வளர்ச்சியை ஏற்றுக்கொண்ட நம் மனது, இதனையும் புரிந்து ஏற்றுக்கொள்ளும் என நம்புகிறேன்.

சமீபத்தில் கேரளா பள்ளிகளில் சாதி, மதம் என்ற ஒன்றை மாணவர்கள் துறந்ததை கேள்விப்பட்டிருப்போம். அதேபோல் நாமும் மாற்றத்தை உருவாக்க வேண்டும். இது சட்டத்திலிருந்து மாறுபாட்டால் மிகவும் சிறந்தது. இது பள்ளிகளில் இருந்து தொடங்கினாள் இன்னும் சிறப்பு. ஆம், விதைப்பதை சரியாக விதைத்தால் தான் விளைவதும் சரியானதாக விளையும்.

சிலர் இதை அனுபவப்பட்டிருக்கலாம். தெரிந்தவர் சிலர் வீட்டுக்கு சென்றால் அங்கிருக்கும் முதியவர்கள் ‘‘நீங்க என்ன ஆளுங்க’’ என்று கேட்டிருக்க கண்டிருப்பீர். அந்த வழியை நமக்கு அடுத்து வரும் சந்ததியினருக்கு தராதிருக்க நாம் அனைவரும் ஒத்துழைக்க வேண்டும்.

‘‘யாதும் ஊரே யாவரும் கேளிர்’’

என்பதனை நம் குழந்தைகளுக்குச் சொல்லி வளர்ப்போம். வளம் நிறைந்த தமிழகம் உருவாக்குவோம்.

‘‘வினை விதைத்தவன் வினை அறுப்பான்
தினை விதைத்தவன் தினை அறுப்பான்’’

என்பதற்கேற்ப நல்லவைகள் பலவற்றை விதைத்து நல்ல மனிதர்களை உண்டாக்குவோம்.

## – மகாலெட்சுமி சிவானந்தம்

**பிழைகள் இருக்கலாம் அதில் உங்கள்
பிள்ளைகளாகிய நாங்கள் இருப்போம்**

# திறவுகோல்

விலை மதிப்பில்லாத தங்கள் நேரத்தை ஒதுக்கி இந்த இதழை படித்த அனைவருக்கும் எங்கள் அணியின் சார்பில் நன்றியை உரித்தாக்குகிறோம்.

மன்னார்குடியில் இருந்து வெளியிடப்படும் முதல் மாத இதழ் இது. உள்ளூரில் இருக்கும் படைப்பாளிகளை அடையாளம் கண்டு அவர்களின் படைப்புகளை வெளி உலகிற்கு கொண்டு வரும் வண்ணத்தில் துவங்கிய மாத இதழ்.

நீங்கள் படித்த கட்டுரைகளில் ஏதும் பிழைகள் அல்லது முரண்பாடுகள் இருப்பின் உங்கள் விமர்சனங்களை முன் வையுங்கள். எதிர்காலத்தில் அதை கருத்தில் கொண்டு இன்னும் வலுவாக செயல்படுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொள்கிறோம்.

---

நீங்கள் உங்கள் விமர்சனங்களை அனுப்ப
மின்னஞ்சல்: thiravukolfdbk@gmail.com
பகிரி: +91 8220567322

---

மன்னார்குடி படைப்பாளர்கள் தங்களின் படைப்புகள் சிறுகதை, கட்டுரை, கவிதை, ஓவியம் என எங்கள் இதழில் இடம் பெற செய்ய
மின்னஞ்சல்: thiravukolsubmit@gmail.com
பகிரி: +91 8220567322

---

தொடர்ந்து பகிரி வழியில் தங்கள் கைப்பேசிக்கே மின்னிதழை பெற
பகிரி: +91 8220567322

---

இணையம் மூலம் தரவிறக்கம் செய்ய
http://maintharkal.mannai.in

---

அடுத்த இதழில் இன்னும் சிறப்பான படைப்புகளுடன் உங்களை சந்திக்கிறோம்.

கி. மாணிக்கம்
திறவுகோல் ஆசிரியர் குழு

## 2015ம் ஆண்டு முதல்
## மன்னையின் மைந்தர்கள் குழுவின் பணிகள் ....

காவிரி, உரிமை மீட்பு குழுவின் பனங்குடி, இந்திய அரசின் பெட்ரோலிய ஆலை முற்றுகை போராட்டத்தில் மன்னையின் மைந்தர்கள் பிற போராட்ட குழுவுடன்

சீமை கருவேல மரம் அழிப்பு மன்னை தொடர்வண்டி நிலையம் அருகில்

இரத்த தான முகாம்

கடலூர் வெள்ள நிவாரண பணிகள்

பூமியை காப்போம் கருத்தரங்கம் (தேசிய மேல்நிலைப் பள்ளி - மன்னார்குடி)

நம்மாழ்வார் பூங்கா அமைத்தல் (தொடர் வண்டி நிலையம் அருகில் )

நெகிழி அழிப்பிற்கான விழிப்புணர்வு

தோழர் கு. முத்துகுமார் 7ம் ஆண்டு நினைவு நாள்

உயர்திரு. சகாயம் (இ.ஆ.ப.) அவர்கள் பங்குபெற்ற நமது வாக்கு! நமது உரிமை!! தேர்தல் கருத்தரங்கம்

தொடர்வண்டி நிலைய கருவேல மரம் அகற்றல் மற்றும் சமநிலைப்படுத்துதல்

உலக சுற்றுசூழல் தின அன்று தொடர்வண்டி நிலையத்தில் இருக்கும் கருவை மரங்களை அகற்றும் பணி நடைபெற்றது

ஜி. ஆர். தோப்பு சீமை கருவேல மரங்கள் அழிப்பு

மாணாக்கர்களுக்கு கையேடு, எழுதுகோல் வழங்கிய மன்னையின் மைந்தர்கள் குழு

நம்மாழ்வார் ஏரியில் நடைபெற்ற பணிகள்
சீமை கருவேல மரங்கள் அழிப்பிற்கு பின் தூர்வாரி மீட்டெடுத்தல்
பழைய சுவர்களில் வெள்ளையடித்தல்
நிலத்தடி நீர் அதிகரிக்க வேண்டி செய்த பணி
குழாய் பதிக்கும் பணி
விதை விதைப்பு, மரக்கன்றுகள் நடப்பு

திறவுகோல் மின்னிதழ் வெளியீடு

மன்னையின் மைந்தர்கள்
மண்ணின் மாற்றத்தை நோக்கி

## எங்களுடன் இணைந்து செயல்பட விரும்புவர்கள் தொடர்பு கொள்ளுங்கள்

**+91 8220567322**

http://maintharkal.mannai.in

MannaiyinMaintharkal மன்னையின் மைந்தர்கள்